உ
சிவமயம்
கணபதி துணை.

அட்டவீரட்டானத்திலொன்றாகிய

திருக்குறுக்கைப் புராணம்.

திரிசிரபுரம் மகாவித்துவான்

ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

இது

திருக்கைலாயபரம்பரைத்

தருமபுரவாதீனத்து ஸ்ரீலஸ்ரீ

சிவஞானதேசிகசுவாமி அவர்கள்

கட்டளையிட்டருளியபடி

திருக்குறுக்கை

ந. சோமசுந்தர உபாத்தியாயர்

முயற்சியால்

சிதம்பரம்

சிவசநாப்பிரசங்க ரத்நாகரம்

ஸ்ரீ அப்பாக்கண்ணு ஓதுவாரவர்களால்

தமது

ஸ்ரீலோகமாதா அச்சுக்கூடத்தில்

முன்பதிப்பிக்கப்பட்டதை

இப்பக்கமுதல் ஆறு பக்கங்களும் 250 காப்பிகளுடன்

பேரளம் திருமீயச்சூர் பிரம்ம வித்தியா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுக்கைவீரட்டம்.

திருநாவுக்கரசுநாயனார்.

பண் திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியிற்பிரமனார்தாமர்ச்சித்தாரடியிணைக்கீ
ழோதியவேதநாவருணருமாறுணரலுற்றார்
சோதியுட்சுடராய்த்தோன்றிச்சொல்லினையிறந்தார்பல்பூக்
கோதிவண்டறையுஞ்சோலைக்குறுக்கைவீரட்டனாரே. (க)

நீற்றினைநிறையப்பூசிநித்தலுநியமஞ்செய்து
ஆற்றநீர்பூரித்தாட்டுமந்தணாளனைக்கொல்வான்
சாற்றுநாளற்றதென்றுதருமராசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (உ)

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
யழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௩)

சிலந்தியுமானைக்காவிற்றிருநிழற்பந்தர்செய்து
உலந்தவணிறந்தபோதேகோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க்காவிரிசூழ்சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனாரே. (௪)

ஏறுடனேழடர்த்தானெண்ணியாயிரம்பூக்கொண்டு
வாறுடைச்சடையினானையர்ச்சித்தானடியிணைக்கீழ்
வேறுமோர்பூக்குறையமெய்ம்மலர்க்கண்ணைமீண்டக்
கூறுமோராழியீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௫)

கல்லினாலெறிந்துகஞ்சிதாமுணுஞ்சாக்கியனார்
நெல்லினார்சோறுணாமைநீள்விசும்பாளவைத்தா
ரெல்லியாங்கெரிகையேந்தியெழிறிகழ்நட்டமாடிக்
கொல்லியாம்பண்ணுகந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௬)

திருக்குறுக்கைவீரட்டம்.

காப்பதோர்வில்லுமம்புங்கையதோரிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ்செருப்புத்தொட்டுத்தூயவாய்க்கலசமாட்டித்
தீப்பெருங்கண்கள்செய்யகுருதிநீரொழுகத்தன்கண்
கோப்பதும்பற்றிக்கொண்டார்குறுக்கைவீரட்டனாரே. (எ)

நிறைமறைக்காடுதன்னினீண்டெரிதீபந்தன்னைக்
கறைநிறத்தெலிதன்மூக்குச்சுட்டிடக்கனன்றுதூண்ட
நிறைகடன்மண்ணும்விண்ணுநீண்டவானுலகமெல்லாங்
குறைவறக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (அ)

அணங்குமைபாகமாகவடக்கியவாதிமூர்த்தி
வணங்குவாரிடர்கடீர்க்குமருந்துநல்லருந்தவத்த
கணம்புல்லர்க்கருள்கள்செய்துகாதலாமடியார்க்கென்றுங்
குணங்களைக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (௯)

எடுத்தனனெழிற்கைலையிலங்கையர்மன்னன்றன்னை
யடுத்தொருவிரலாலூன்றவலறிப்போயவனும்வீழ்ந்து
விடுத்தனன்கைநரம்பால்வேதகீதங்கள்பாடக்
கொடுத்தனர்கொற்றவாளாள்குறுக்கைவீரட்டனாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நெடியமால்பிரமனோடுநீரெனும்பிணங்கொள்ள
வடியொடுமுடியுங்காணாரருச்சுனற்கம்பும்வில்லுந்
துடியுடைவேடராகித்தூயமந்திரங்கள்சொல்லிக்
கொடிநெடுந்தேர்கொடுத்தார்குறுக்கைவீரட்டனாரே. (க)

ஆத்தமாமயனுமாலுமன்றிமற்றொழிந்ததேவர்
சோத்தமெம்பெருமானென்று தொழுதுதோத்திரங்கள்சொல் [லித்
தீர்த்தமாமட்டமிமுன்சீருடையேழுநாளுங்
கூத்தராய்வீதிபோந்தார்குறுக்கைவீரட்டனாரே. (உ)

திருச்சிற்றம்பலம்.

அட்டவீரட்டத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

காவிரியின்கரைக்கண்டிவீரட்டானங் கடவூர்வீரட்டானங்காமருசீரதிகை, மேவியவீரட்டானம்வழுவைவீரட்டம்வியன்பறியல்வீரட்டம்விடையூர்திக்கிடமாங், கோவனகர்வீரட்டங்குறுக்கைவீரட்டம் கோத்திட்டைகுடிவீரட்டானமிவைகூறி, நாவினவின் றுரைப்பார்க்கு நணுகச்சென்றானமன்றமருஞ் சிவன்றமரென்றகல்வர்நன்கே.

திருச்சிற்றம்பலம்.

அட்டவீரட்டம்.

திருச்சிற்றம்பலம்.

பூமன் சிரங்கண்டி யந்தகன்கோவல் புரமதிகை
மாமன்பறியல் சலந்தரன் விற்குடி மாப்பழுவூர்
காமன் கோறுக்கை யமன்கடவூரிந்தக் காசினியிற்
றேமன்று கொன்றையுந் திங்களுஞ்சூடிதன் சேவகமே.

திருச்சிற்றம்பலம்.

திருமூலர் - திருமந்திரம்.

திருச்சிற்றம்பலம்.

இருந்த மனத்தை யிசைய விருத்திப்
பொருந்திய லிங்க வெளியது போக்கித்
திருந்திய காமன் செயலழி யத்தங்
கருந்தவ யோகங் குறுக்கை யமர்ந்ததே.

திருச்சிற்றம்பலம்.

படல அகராதி.

படலம்.	பக்கம்.	பாட்டு.
கடவுள்வாழ்த்து ...	௧ ...	௨௨
அவையடக்கம் ...	௪ ...	௯
சிறப்புப்பாயிரம் ...	௫ ...	௧
திருநாட்டுப்படலம் ...	௫ ...	௭௰
திருநகரப்படலம் ...	௧௩ ...	௫௰
நைமிசப்படலம் ...	௧௯ ...	௩௫
யோகீசப்படலம் ...	௨௪ ...	௫௰
காமனெழுச்சிப்படலம் ...	௩௰ ...	௫௧
காமதகனப்படலம் ...	௩௭ ...	௫௩
திருக்கலியாணப்படலம் ...	௪௩ ...	௪௫
காமனுயிர்பெறுபடலம் ...	௪௯ ...	௨௬
கம்பகரப்படலம் ...	௫௩ ...	௧௮
இலக்குமிபூசைப்படலம் ...	௫௫ ...	௨௫
குமாரபூசைப்படலம் ...	௫௮ ...	௧௬
இராமலிங்கப்படலம் ...	௬௰ ...	௨௫
திருவிழாப்படலம் ...	௬௩ ...	௨௫
குறுக்கைப்படலம் ...	௬௬ ...	௭௨
கண்ணன்பூசைப்படலம் ...	௭௫ ...	௨௫
பிரமலிங்கப்படலம் ...	௭௯ ...	௨௬
சயத்துவசப்படலம் ...	௮௨ ...	௨௫
அகத்தீசப்படலம் ...	௮௫ ...	௧௫
துர்க்கைப்படலம் ...	௮௭ ...	௧௧
காமீசப்படலம் ...	௮௯ ...	௧௫
தலவிசேடப்படலம் ...	௯௰ ...	௨௬

ஆக படலம் ௨௪. செய்யுள் ௭௱௩௰௬

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுக்கைப்புராணம்.

விநாயகக்கடவுள்.

காப்பு.

நீர்கொண்ட மழைதவழ்மால் வரைச்சாரற் றினைப்புனத்து நீபத் தொண்பூந்
தார்கொண்ட பன்னிருதோட் டம்பியார் பெருங்காத றணிப்பா னன்பர்க்
கேர்கொண்ட தன்னுறுப்பொன் றிரண்டிரண்டு மூன்றுமூன் றிரண்டி ரண்டு
பார்கொண்ட நான்கைந்தோன் முகவரு குஞ்சரத்தைப் பரவி வாழ்வாம். (க)

கடவுள்வாழ்த்து.

வீரட்டேசுரர்.

பூமேவு நறுங்கமலத் திருமுனியுந் தருமுனியும் புழைக்கைத் தானத்
தாமேவு கடாக்களிறு காத்தவனும் பூத்தவனு மாயி னானுந்
தூமேவு மகவானும் புகவானும் பிறவுமருள் சுரந்து நல்கி
னாமேவு குறுக்கையமர் வீரட்டே சுரர்மலர்த்தாள் வணங்கி வாழ்வாம். (உ)

ஞானம்பிகை.

பற்றுமொரு கழைகுழைத்தோர் கணைதொடுத்தா னுடல்பொடித்த பரமயோ
கற்றும்வணங் காதமுடி நனிவணங்க வவன்சாபஞ் சாம்போற் போமோ [கி
முற்றுமிவை காரணமா தலினழியா வெனக்கரும்பு மூரி வில்லு [வாம்.
மெற்றுமது மலர்க்கணையுங் கொண்டருண்ஞா னம்பிகைதா ளிறைஞ்சி வாழ்

மன்மதசங்காரமூர்த்தி.

எங்குமவ னன்றியோ ரணுவுமசை யாதென்ப தியாருந் தேரத்
தங்குசிவ யோகிருந்த ஞான்றுயிரெ லாமிருந்த தன்மை தேர்ந்துங்
கொங்குமலர் மலரொன்று கருதாதிட் டவன்சேர்ந்தார்க் கொல்லி யாசப்
பொங்குநுதல் விழிமலர்ந்த பரமகுரு சாமிபொற்றாள் போற்றி வாழ்வாம். (ங)

பூரணியம்மை.

இறையவனெத் திறநிற்பா னிறைவியுமத் திறநிற்பா ளென்று நன்னூ
னிறையவுணர்ந் தவர்கருணை யாலுரைக்கு மாத்தமொழி நிசமே யாக
மறையவனு மியருணரான் யோகீசனுய்ர்குறுக்கை மருவு ஞான்று
பொறையருள்கூர் ஞானமுனைந் துடன்மருவு பூரணியைப் போற்றி

சபாநாயகர்.

மண்ணாதி யாறாறுக் கப்பாலா யெப்பாலும் வயங்கா நின்ற
விண்ணாதி யெட்டுருவந் தொறுநிறைந்து மறைமுதனூல் விரித்துக் கூறு
மெண்ணாதி கடந்தடியோ மிதயாதி கவர்ந்துமன்றத் தென்று மோங்கற்
பெண்ணாதி யெவருமகிழ்த் தரநடஞ்செய் பெருவாழ்வைப் பேணி வாழ்வாம்.

சிவகாமசுந்தரி.

மாலாதி யுயிரிடத்து வைத்தபெருங் கருணைவள மலிதலால்விண்
காலாதி யைம்பூதக் கலப்புறு தலையின்பக் கலப்பு மேய
மேலாதி முதல்வனியற் றுணர்ந்து நடங்காணும் விரதம் பூண்ட
சேலாதி மருட்டும்விழிச் சிவகாம சுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம். (எ)

வயிரவக்கடவுள்.

ஆக்கும்வினை மலரயனை தன்றென்றற் கவனாத மாங்க நான்குங்
காக்கும்வினை மாயவனை தன்றென்றற் கவன்மேனி கழிநெய்த் தோருந்
தாக்கும்வினை யாளருந்தேர் சான்றுணைக்கக் கூர்கொளுகிர்ச் சாங்கத்தோடு
போக்கும்வினைச் சூற்படையு பாங்குமுங்கொள் வடுகனடி போற்றி வாழ்வாம்.

குறுக்கைவிநாயகக்கடவுள்.

இருதிணையு நிறைந்துறைவ தொருதானே யெனல்புவனத் தியாருந் தேரக்
கருதிணையி லத்திணைசேர்ந் தாகியவோர் மூர்த்தியாகஞ் சதிர்ப்ப மேவி
யருதிணைகொன் றயனையறு தியர்வணங்கி வாழ்த்துதொறும் வரங்க ணல்கி
யொருதிணையும் வழுவாது நடாத்துகுறுக் கைக்களிற்றை யுளங்கொள் வாமே.

சுப்பிரமணியக்கடவுள்.

மறைமேரு முழுமலையு மெழுமலையுந் தோளவுணர் வருக்க மாயப்
பிறையேறு கருங்கடலும் பெருங்கடலு மொருங்கடலும் பிறங்கு வானத் [ட
துறையேறு தலைமறந்தா ரொருங்கேறு தனுமுளங்கொண் டொருகை தொட்
டிறையேறு சமரவேற் குமரவே டிருவடிகட் டலைமேற் கொள்வாம். (௧௦)

திருநந்திதேவர்.

வேறு.

பஞ்சா வரணத் தடைநீங்கிப் பங்கே ருகனு தியர்புறத்தே
பஞ்சா ரடியா ளொருபாகன் பாதங் கலக்க விடல்போல்வெப்
பஞ்சாம் வகைநிற் பவரகத்தே பஞ்ச பாசத் தடையொழிந்தின்
பஞ்சா ரொளியிற் கலக்கவிடும் பரம னந்தி பதம்பணிவாம். (௧௧

அகத்தியமுனிவர்.

வேறு.

பழையகாப் பியக்குடியோன் பனம்பாரன் முதலானோர்
விழையநூற் றிறமுழுதும் விரித்துரைத்துக் குறுவுபூண
மொழியவா மதர்கெடுங்க ணுமைபாகமுத் திரையொடுமென்
[illegible] வாம். (௧௨

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

வேறு.

எழுதரிய மறைமொழிப்புக் குழுதறியாச் செவித்துளையி னிழுதையோ டாய்ப்
பழுதமையும் புறச்சமயர் கெட்டோமென் றழப்புகலிப் பதிக்கட் பொய்கை
முழுதமையுங் கரைநின்றோர் மழவாகி யழுதரியா முதலை நோக்கி
யழுதமறைக் குழவியடி தொழுதகையே மாகிவினை யழுவந் தீர்வாம். (கங)

திருநாவுக்கரசுநாயனார்.

இருளென்று சொலத்திரியா மனம்வேவ நீற்றறையு ளிருந்து முற்றேம்
வெருளென்று துயர்க்கடலு ளவரமுந்தக் கருங்கடற்கண் மிசைமிதந்து
மருளென்று மாறாத வெண்ணீறுங் கண்மணியு மைந்தெழுத்தும்
பொருளென்று தெரிவித்த புண்ணியவா கீசர்பதம் போற்றி வாழ்வாம். (கச)

சுந்தரமூர்த்திநாயனார்.

சதிர்த்தநுதல் வெண்ணீறுந் திருமார்பிற் கத்தூரி கமழுஞ் சாந்தும்
விதிர்த்தவடி வாள்பொருகட் பரவையார் முலைச்சுவடும் வேதமேயென்
றதிர்த்ததமிழ்ச் செவ்வாயும் பெருமானே பணிபுரிதற் கமைவான் றீமை
யுதிர்த்ததிருப் பேரன்பு முடையவா ரூரரடி யுவந்து வாழ்வாம். (கரு)

மாணிக்கவாசகசுவாமிகள்.

மன்னுமருட் குரவனாய்க் குருந்துறையும் பெருந்துறையில் வதிந்தகோமான்
கொன்னுமொலி மலிகுதிரைச் சேவகனாய் மண்சுமக்குங் கூலி யாளா
பின்னுமொரு தரஞ்சொலெனக் கேளாமற் சொற்றபடி யெழுதுவோனாய்த்
துன்னும்வகை நெக்குருகு வாதவூ ரண்ணலடி தொழுது வாழ்வாம். (கசு)

தண்டீசநாயனார்.

வேறு.

காரொடு முரணுங் கண்டக் கண்ணுத லுவந்த வட்டந்
தாரொடு கலமு மன்றித் தனக்கென வேறு வேண்டாச்
சீரொடு பொலிதற் கேற்பச் செங்கையின் மழுவுங் கொண்டு
நாரொடு பொலிதண் டீச னகைமலர்ப் பாதம் போற்றி. (கஎ)

அறுபத்துமூவர்.

வேறு.

நகைய மைந்த வன்றொண்டர் நவிறொண்டத்
தொகைய மைந்த தொகையடி யார்களுந்
தகைய மைந்த தனியடி யார்களும்
வகைய மைந்தவென் னுள்ளத்து வாழ்வரோ. (கஅ)

பஞ்சாக்கரதேசிகர்.

வேறு.

திரமலி கைலை வெற்பிற் சிவபிரா னருளப் பெற்ற
வரமலி நந்திப் புத்தேள் மரபினை விளக்கி ஞானத்
துரமலி துறைசை மேவு மொருநமச் சிவாய தேவன்
றிரமலி பாதப் போதே தலைக்கணி யாக்கி வாழ்வாம் (ககூ)

அம்பலவாணதேசிகர்.

வேறு.

துன்னு பாசந் துவைத்தரு ளுய்க்குமான்
முன்னும் வேத முழக்கெழு கோமுத்தி
மன்னு மம்பல வாணநந் தேசிகன்
பொன்னு நேரிலம் போருக பாதமே. (உ0)

மற்றையடியார்கள்.

குறுக்கை நாயகன் கோயிற் பணிவிடை
வெறுக்கை யின்றி விரும்புநர் கற்பணி
யொறுக்கை செய்யர சான்முத லோர்ந்தவை
மறுக்கை செய்பவர் யாவர்க்கும் வந்தனம். (உக)

கலைய ரோனுங் கணையின் மகம்புரி
நிலைய ரோனுமன் பில்லவர் நீசரோ
புலைய ரோனும் புராணற்கன் புள்ளவர்
தலைய ரன்னவர் தாடொழு வாமரோ. (உஉ)

கடவுள்வாழ்த்துமுற்றிற்று.

அவையடக்கம்.

வேறு.

அரிதகி விடமுண லெனுத ருந்திநே
னரிதகி வினையெலா மைய வென்னுமெய்
யரிதகி யாதியை யடைய நல்குவோ
னரிதகி வனத்தம ரமலன் மான்மியம். (க

முன்னிய வடமொழி மொழிபெ யர்த்தினி
துன்னிய தமிழினு லோத வேண்டுமென்
றன்னிய முருதுபே ரருட்க லப்புற
மன்னிய நீறுகண் மணித ரிப்பவர். (உ

உழுதொழில் புரிந்துல கோம்பு மேன்மையர்
பழுதகல் வாய்மையர் பரவு மன்பினர்
தொழுதகு சிவார்ச்சனைத் தொழில ருதவ
ரெழுதரும் பெரும்புக ழியைந்த போரவையர். (ங

தண்மைசேர் பெருங்குணச் சைவர் யாவரு
முண்மைசேர் வாய்மலர்ந் துரைக்க வுட்கொடு
வண்மைசே ரவர்மொழி மறுத்தற் கஞ்சியே
வெண்மைசே ரறிவினேன் விளம்பன் மேயினேன். (ச

வேறு.

கருப்புவின் மலரோக் கொண்டு கறுத்தெழு காமற் காய்ந்த
பொருப்புவிற் பெருமான் காதை பொருமிரு வினைக்கோட் பட்டே
யருப்பிள முலையார் மால்கொண் டலைபுலை நாயே னுய
விருப்புவன் மனத்தேன் கூறு மிஃதிறும் பூதாம் யார்க்கும். (ரு)

வேறு.

மாமத கனங்கொ லெனக்கறுத் தார்த்து வருமொரு கரியுரி செய்தோன்
றாமத கனம்புக் குலாய்வருங் கழனி சூழ்திருக் குறுக்கையம் பதியோன்
காமத கனஞ்செய் கண்ணுதற் பெருமான் கறைமிடற் றிறையவன் காதை
நாமத கனஞ்சா துரைப்பது மனையா னற்பெருங் கருணையா லன்றே. (௬)

வேறு.

கற்றோர்த நன்மொழியே கோடுநின்போன் மடமைகொடு காலம் போக்க
லுற்றோர்தந் தீமொழியுங் கோடுமோ வெனக்குறுக்கை யொருவன் கேட்கிற்
பற்றோர்தண் ணமுதங்கான் மதியன்றி வெவ்விடங்கால் பாம்புங் கூட்டிச்[னே.
சுற்றோர்செஞ் சடைக்கணிந்த தென்னென்பே னதற்கவனென் சொலவல் லா

மொழிமுதலா காதஙக ரமுமகரஞ் சார்ந்துமுத லாய்ச்சுட் டாதி [வன்
வழிவரல்போன் மொழிமுதலா காதவென்பா டலுங்குறுக்கை வளர்மா தே
பழிதபுகா தையைச்சார்ந்து முதலாய்ச்சுட் டாதிவழி படரு மாலை
தழிவிலிய வுணர்ச்சியரோர் குவரதனால் யானவர்க்கொன் றறைவ தில்லை.

வேறு.

இணையிலாக் குறுக்கை மேய வீசன்மா லன்றி வேறு
கணையிலாப் பெருமான் காதை கடைப்பிடித் துரைக்க லுற்றே
னணையிலாப் பிறவி வேலை யகற்றுதற் காய வேறு
புணையிலா துணர்ந்து கைக்கொள் புணையிதே யெனத்து ணிந்தே. (௭)

அவையடக்கம் முற்றிற்று.

சிறப்புப்பாயிரம்.

வேறு.

பூமலிய மணிகொழிக்கும் பொன்னிசூழ் குறுக்கைநகர் பொலியோ கீசர்
தேமலியுஞ் சரிதம்வட மொழியிலிருந் ததைத்தமிழிற் றெளியச் செய்தான்
காமலியுந் திரிசிரா மலையுதித்துப் பரமதமாங் கருளை யோட்டி
மாமலிய மேவுகதிர் மீனாட்சி சுந்தரநா வலன்மிக் கோனே. (௧)

திருநாட்டுப்படலம்.

வணங்கு மாலய னாதியர் வேட்டன வழங்கி
யிணங்கு ஞானநா யகியொடு மெங்கள்யோ கீச
னணங்கு தீர்தர வமர்தரு குறுக்கைமு னளவி
லுணங்கு றாத்தலந் தழுவுசோ ணாட்டணி யுரைப்பாம். (௧)

குலவு ஞாலமுற் றோம்புவா னிகழ்பெருங் கொண்மூ
நிலவு மாமதிற் குறுக்கைநா யகன்றிரு நீறு
கலவு மேனியோர் பாதியின் விளர்த்தெழீஇக் கதிர்க
ளுலவு வான்வழிக் கொண்டுசென் றிருநகட லுற்று. (௨)

அரவு சூடுமந் நாயகன் சடைமுடி லவனி
யுரவு நீரமே லெழுபுனல் குடிப்பதை யொப்ப
விரவு மாகடற் புனல்குடித் தத்தகு விமலன்
பரவு மற்றொரு பாதிமே னியினுடல் பசந்து. (௩)

அந்த நாயகன் யானையை யுரித்தநா ளதுமண்
சிந்த வாய்திறந் தார்த்தெனத் திசைதொறு மார்த்துப்
பந்த மோவுமந் நாயக னெடுஞ்சடைப் பரப்பி
னந்த வாளராக் கணமெலா மின்னுத னவிற்றி. (௪)

அன்ன நாயகன் மேனிமேல் யானைத்தோல் வளைந்த
தென்ன மால்வரை யெங்கணு மிடமற வளைந்து
சொன்ன நாயகன் காமவேள் மேற்சினஞ் சுரந்தாங்
குன்ன மாகொடுங் கோடைமே லுறுசினஞ் சுரந்து. (௫)

அனைய தம்பிரான் கட்டழ குடையவே ளழிந்தாங்
கினைய வானுத விடத்தமர் கண்டிறந் தென்னத்
துனைய வாரழ லினுஞ்சுடு கோடைபோய்த் தொலையப்
புனைய வாயதம் பாற்பொலி பல்கணுந் திறந்து. (௬)

இன்னு மன்னவன் மேருவில் வாங்கிய தேய்ப்ப
மன்னும் வையக மகிழ்தர வில்லொன்று வாங்கி
மின்னு மன்னவன் கருணையே பொழிவது விழையப்
பொன்னு நேரிலாப் பெருமழை யோகனி பொழிந்த. (௭)

கழிந்து வீழ்தலை மாலையான் செஞ்சடைக் காட்டில்
வழிந்து வீழ்பெரு வெள்ளமோ வெனப்புவி மருள
வொழிந்து வீழ்தலி லாவளை முகட்டுநின் றொருங்கே
யிழிந்து வீழ்புன லருவியே மருவிய தெங்கும். (௮)

பரவு நாயக னல்வகைச் சத்தினி பாதர்க்
குரவு மேவுதன் னருள்பொழி தருதிற மொப்ப
விரவு நாற்றிணைக் கவணவன் வேண்டுமா தெரிந்து
கரவு நீர்தரப் பொழிந்தன மழைதழை கனமே. (௯)

திருந்து பல்விடத் துஞ்செறி தாரைக டிரண்டு
பொருந்து பல்வழிக் கொண்டுகா விரியகம் புகுமா
லருந்து மண்ணகத் துறைசனம் பலவழி யடைந்து
மருந்து நேர்புன லாடவந் நதிபுகன் மானும். (௧௦)

வேறு.

புரைதபு முகிலூர் குன்றம் புனைந்தநீண் முடித்தேர் மானு
மிரைதிரைப் பொன்னி யத்தேர்க் கிட்டநீள் வடத்தை மானுங்
கரையிரு பாலுந் தாழ்ந்து கவிழ்சினைத் தாரு வெல்லா
நிரையினவ் வடந்தொட் டீர்த்து நிற்பவர் மானு மாலோ. (௧௧)

பயந்தரு முழக்கி னானும் பரந்தபன் முகத்தி னானு
மயர்ந்திடா நடையி னானு மத்திகின் றொழுக லானும்
வியந்தடு வெண்மை யானும் வெற்பினின் றெழுத லானும்
வயந்தரு சிங்கம் போலு மறிதிரைப் பொன்னி யாறு. (கஉ)

கோடிரண் டுடைமை யானுங் குவட்டொடு பொருத லானுஞ்
சூடிய மணியி னானுந் துதிக்கைகொண் டொழுக லானு
மூடிய நுரையென் றோது முகபடாங் கோட லானு
மோடியன் மதநீ ரானு மும்மலை பொருவும் பொன்னி. (கங)

வரையெனும் புருடன் பொன்னி மாநதி யிருகோ டென்னும்
புரையிறீ ணீட்டி யாழி புக்கமஞ் சகங்கை யள்ளி
யுரைசெய்தன் றலைமேல் விட்டுக் கொள்ளவாங் கதுவ ழிந்து
தரைமிசை யொழுகல் போலுந் தவாவொழுக் குறுநீர்ப் பொன்னி. (கச)

அடியவை மலரோன் பாக மமர்நடு வரைமால் பாக
முடிமகா லிங்கம் பூசை முயன்முனி வரர்குன் றுள்வோர்
தடிமுகிற் கணங்க டங்க டாரைமஞ் சனங்கா வேரி
நெடியகோ முகைபே ராழி நிறைதரு தீர்த்தத் தொட்டி. (கரு)

வளைவளை வுருவ மாய மாதேவ னவன்றோ ளிட்ட
விரைசமழ் நெடிய மாலை விரிநதி யிரண்டு கோடும்
புனையிலம் மாலை யம்மா பொழிநறா வெள்ளம் போலுங்
கனையகம் புறமலி ராய கமழ்சுவைப் பொன்னி நீத்தம். (கசா)

மழைவளை முகட்டி லேறி மாதமும் மாரி பெய்யத்
தழைதரு புனல்கா வேரி சார்ந்தொருங் கோடி வீரை
விழைதர நிறைத லாலவ் வீரைக்கு முந்நீ ரொன்று
பழையநா லுணர்ந்தோர் கூறும் பரிசிஃ துணர்ந்து போலும். (கஎ)

ஞானசம் பந்தர் மேக ஞானப்பா னரலைந் தோய
மீனசம் பந்த நக்கு மிருந்தமிழ்ப் பாடன் மாரி
யூனசம் பந்த ராய வருகந்த ரொழிந்த கோடை
மானசம் பந்தச் சைவர் மண்மிசைத் தழைத்த பைங்கூழ். (கஅ)

செக்கர்வான் சடையுந் திங்கட் சிறுபிறை யேனக் கோடுந்
தக்கவென் றணிந்த வானச் சங்கரன் மழைவில் வாங்கி
திக்கவாங் கடனீ ரம்பு சேர்த்துநேர் செலுத்து முன்னம்
புக்கவெங் கோடை யாய புரமுர னற்ற தன்றே. (ககூ)

பிழைவளம் பெருக்கி நாளும் பிழைவளங் கருதி யுள்ளங்
குழைவளங் கருதா யானோ கூறவல் லவன்சோ ணாட்டு
மழைவள முழுதுஞ் செந்தேன் மலிவளம் பொலிகு றிஞ்சி
விழைவளுஞ் சிறிது சொல்லேன் வேலைவா யிகையி னானே. (௦)

குறிஞ்சி.

வேறு.

குமர வேளின மாதலி னவன்குடி கொள்ளுந்
தமர வாரரு வித்திணை சார்ந்துதங் களுக்கு
மமர மான்மிய முண்டென லறிவித்தாங் கலர்ந்து
பமர மேவுறு தமர்வன வேங்கைகள் பலவும். (உக)

கந்த வேளரு விப்புன லாடவுங் காந்தள்
சந்த மார்விரை சூடவும் பூசவுந் தவாத்தே
னந்த வேனன்மா வருந்தவு முளங்குறித் தன்றே
வெந்த நாளுமால் வரையக நீங்குறு திருத்தல். (உஉ)

அருவி யார்ப்பன வொருபுறந் தொண்டக மாதி
மருவி யார்ப்பன வொருபுற மழைகண்டு மஞ்ஞை
யிருவி யார்ப்பன வொருபுற மினமழை யாய
கருவி யார்ப்பன வொருபுறங் கானவர் குறிஞ்சி. (உங)

கழைசெய் பேரள வாம்பனை பொருந்தியுங் கடையாந்
திழைசெய் நெய்தல்போ லாதறி வாளர்சிற் றனவென்
றுழைசெய் நுண்டினை பொருந்தியு முதன்மையுற் றோங்கும்
வழைசெய் வான்றினை போல்வது மற்றெது மண்மேல். (உச)

உரல றைக்குழி யானைக்கோ டுலக்கையோங் கேனற்
குரல்மி திப்பது கயமுனிக் குழாங்குளி ரருவி
நிரல்வி ளைப்பதக் குரல்களை நிகழ்குற மடவார்
விரல்ப றித்தெறி கவண்கலு மிளிர்பல மணியே. (உரு)

இலகு செம்மணி கொழித்துவெள் ளருவிக ளிழியு
மலகு தீர்புக ழமைந்தவீங் கோயுமே லாய
வுலகு மேத்தமேற் பறந்தெழு காகத்தை யொழித்தல்
விலகு றுதவாட் போக்கியுங் குறிஞ்சியோ வேறே. (உசு)

ஏயு மாறுரு நாயகர்தங் குலமகட் கிரங்கித்
தாயு மாகிய தம்பிரா னெங்கடா யொடும்பொன்
வேயுங் கோயில்கொண் டமர்கிரி சிராமலை மேவத்
தோயு மாதவ முடையது குறிஞ்சியே சொல்லில். (உஎ)

பிறையும் வாளராக் குலமுமந் தாகினிப் பெருக்கு
நிறையுஞ் செஞ்சடை நின்மலப் பரஞ்சுடர் நீங்கா
துறையுங் கற்குடி மாமலை யொன்றுவா ளுடை
ரறையு மேன்மையக் குறிஞ்சியின் றவமெவ ரறைவார். (உஅ)

மண்ணு ளாரொடு மளவளாய் வான்சுனை மூழ்கி
விண்ணு ளார்தொழுந் தொழுமவர்க் கருளிமே தகுமுக்
கண்ணு ளாரம ரெறும்பியூர் மலை தாரு கயிலைப்
பண்ணு ளார்மறைப் பாட்டொலி வர் மானு ம... ம.

குழைவி ராவிய செவிப்பிரான் றிருவருள் குறித்து
முழைவி ராவிய யோகிய ரருந்தவ முடிக்கு
மழைவி ராவிய மால்வரை யளனைவன் வருத்நா
முழைவி ராவிய கானத்தின் வளஞ்சிறி துரைப்பாம். (௫௰)

முல்லை.

வேறு.

தமக்குவள மிகக்காட்டுஞ் சுரு மறைகூ றியமகங்க
டமக்குவள மிகக்காட்டுந் தடருசெருத்த லுடைப்பசுக்க
டமக்குவள மிகக்காட்டுந் தானங்க ளெனவனங்க
டமக்குவள மிகக்காட்டுஞ் சரிக்குமுகிற் றுலம்பலவும். (௫௧)

பரியாய்நங் கதியடையும் பகவனிட மெனமுயலு
மிரியாநம் மினம்புணரு மேந்தலிட மெனமானுந
சரியானாய் நமைச்சூடுந் தகையினிட மெனத்துளவுந்
பிரியாமே யினிதமரும் பெற்றியகா னகமுழுதும். (௫௨)

பூத்தபிட வெதிர்மலர்ந்து பொலிகாயா நெடுஞ்சாகை
யாத்தகொடி மலர்முல்லை யெழுசிறுகாற் றசைதோற்ற
மேத்தவரு பனிக்குநவத் தெம்பிரா னெதிர்மாரன்
கோத்தகரத் தலைவிடுத்தல் குறித்துமுயல் வதுமானும். (௫௩)

பூமலிந்த காயாமேற் பொலிபலா சுறவுகுத்த
தேமலிந்த மலர்மூடச் சேர்ந்ததுநின் றிடுதோற்றங்
காமலிந்த சடைப்பெருமான் கட்டழல்போய் மேல்வளைப்ப
மாமலிந்த மாரனுரு மறைதரநின் றதுமானும். (௫௪)

தலைவர்தமைப் பிரிந்துறையு நையன்மட மாதருயிர்
நிலைதளரும் படியெழுவ நிரைமணிவண் கார்மாலை
குலைதருமம் மாதாமுகங் குளிரவுட னேயெழுவ
மலைபொருதோ ளவர்விடுதேர் மணியொடவர் தார்மாலை. (௫௫)

வெள்ளேறும் வெண்பாலும் வெண்டயிரும் வெண்ணெய்யுங
கள்ளேறு வெண்டளவுங் கனல்வெள்ளாம் பியுமறுகாற்
புள்ளேறு வெண்பிடவும் வெள்வாகும் பொலிந்துவனத்
துள்ளேறு தலின்முதலா மொருகுணம்போர்த் தெனப்பொலியும. (௫௬)

விண்ணினோர் வந்துதொழ வேட்டனவேட் டாங்கருளி
யெண்ணினோர் தமக்குமிட ரிரித்தருளு நெடுங்களமு
மண்ணினோர் பிரிவொல்லா வருணியம முங்கடல்சூழ்
மண்ணினோர் தருமாறு வனஞ்செய்த தவஞ்சிறிதோ. (௫௭)

திருந்துபுகழ் மிகுமேலைத் திருக்காட்டுப் பள்ளியுமுன்
பொருந்துமிள கத்தனையும் புதுப்பயறே யெனப்புரிந்த
மருந்துநிகர் பெருமானார் மகிழ்ந்துறையு மாத்தலமு
மிருந்துபொலி தரத்தவஞ்செ யிருங்கானப் புகழ்பெரிதால். (௫௮)

மாச்சுரலோ கழும்புகழும வளக்கங்கை கண்டசே
ளீச்சுரமே முதலாய வெண்ணரிய பலதலத்து
நாச்சுரக்கும் புகழ்ப்பெருமா னயந்துறையப் பெற்றதெனி
லேச்சுரனி லாதவன மினிப்பெறவேண் டுவதெவனே. (௩௯)

அண்டர்பிரான் பூசனைக்கா மானைந்தும் பாசுறுகும்
வெண்டயிர்பா னெய்யுநறு வீவெழுமற் றுங்கொடுக்கும்
வண்டளவ வனவளமென் வகுத்தாமிந் திரனசாவல்
கொண்டமரு நதியிணையின் குளிர்வளமுஞ் சிறிதுரைப்பாம். (௪௰)

மருதம்.

வேறு.

இலைமலி கடுக்கை மாலிகைப் பெருமா னிடத்துமா யவன்கிளைத் தென்னக
குலைமலி பொன்னிந் திருநதி யிடத்துக் கொளளிடந் திருநதி கிளைத்த
தலைமலி பாய லன்னமா தவன்பா லலரவன் கிளைத்தெனநாளு
நிலைமலி தருமக் கொள்ளிட நதிபாற் கிளைத்தது நிகரிலா மண்ணி. (௪௧)

மொழிதரு மலர்மே லண்ணல்பாற் கிளைத்த முனிவரர் குழாமெனநாளு
மொழிவரு மண்ணி யெனுந்திரு நதிப்பா லுறுபெருங் காலபல கிளைத்த
வழிவரு மனைய முனிவர்பாற் றோன்று மன்பதைக் குழாமென மதகி
னுழிவரு பல்கா றபாலுறக் கிளைத்த வுரைக்கடங் காச்சிறு கால்கள. (௪௨)

இத்தகு நதியி னிகழ்பிவை யாக விருபத்து நால்வரொன் றுரைக்கு
முத்தமர் தமக்கு மூலமே யாய வொருபெருங் கோசமே போல
முத்தம்வெண் டிரையா லெடுத்தெறி பரிசின் முள்ளிமுற் பற்பல நதிக்கும்
வித்தக மூல மாகியே நாளு மிளிர்வது கண்டகா வேரி. (௪௩)

கண்டகா வேரி யீன்றபல் லாற்றுங் காலெலா மளவிடப் புகுவான்
கொண்டவேழ் கடலுண் மணலெலா மளந்து கொண்டிருக் கின்றன னிற்க
வெண்டபு பெருமா னருளுயி ரளவைக் கேறகுமா திருப்பதை யெய்ப்ப
விண்டநன் னிலத்தி னளவினுக் கேறப விரைநதிறுத் ததுபெரு வெள்ளம.

வேலையிற் பாயு முகில்பொழி புனல்கா விரிமத கூடுபோய்ப் பல்பூஞ்
சோலையிற் பாயு மோடையிற பாயுந் தாறுமலர்த் தடந்தொறும் பாயு
மாலையிற் பாயு மமைந்தசண் ணடைதோ றவிரதரப் பாயுமங் கழனி
மாலையிற் பாயு மாதலாற் புனற்கு வம்பல வமபெனு நாமம்.

ஆன்றவப் பூதி நாயனார் நாவுக் கரையரைக் கண்டது போலுங்
கான்றசோ றென்றே யிருமையுங் சண்டு கழிக்குநா லாவது சத்தி
யூன்றநேர் வாத வூரர்கோன் குருநதி னொருவனைக் கண்டது போலு
மீன்றதா யனைய காவிரி நறுநீ ரெதிருறக் கண்டனர் களமா. (௪௬)

வயலெலாம் பரந்த புனலெதிர் நோக்கி வருத்துறு வேனிலால் விளை
ட, வயலெலாம் பொருந்தப் பொருத்திடு நீரா லறைதரு வெய்யரால் விளை
ட, செயலெலாம் வல்லார் பொருந்திடப் பொருத்துந் தெளிவுடைச் சாந்தர்
போன றதுவால், கயலெலா முலவு சமயமென் றுரைத்தார் களையிலா மகிழச்
சியிற் களமா.

எருமைநா யீன்ற விருகரும் போத்தி னெருத்துறத் துகைத்திடை நாப்பண்
பெருமைசே ரோக்கா லிணைத்தொரு பாசப் பிணித்தது யாமேழியா ரிடக்கை
யருமையிற் பற்றி மற்றொரு வலக்கை யமைகரந்தார்க் கோலொடு முரற்றி
யிருமைசால் கொழுக்கூ ரவைமுகந் தேய வெவ்வகனு முழுதொழில் பூண்ட

குடதிசை நின்று குணதிசை நடத்திக் குறியமுட் கோலொடு தூய்ப்பி
வடதிசை நின்று தென்றிசை நடத்தி வளவிய விளாய்பல கோலி
யடாதரு பசும்பு லாதிகள் பாய வடர்படைச் சான்றிக நெருங்க
விடலிய கழனி யுழநரா ப்ப பொலியா லெழாதிருங் கடலொலி பரலே. (சக)

குடவளை யலறக் குறுங்கய லொளிப்பக் கூன்முது காமையுட் கரிப்ப
மடநடை யனங்கள் சிறைபடிந் தெழமின் னாவியில வாளைத்தா யுமுக்க
விடமறச் செறிந்த பகட்டின முரப்பி யெங்கணு முழுநர்கள் கரிந்து
தடநெடும் பரம்பூர் வாரிறு மாப்பப் பரவிமா னத்தரு முருமா. (ரு0)

புல்லெலா மவிய மெய்த்தெனக் குழைந்து பொருந்துகண் ணடியெனச் சமரா
யலலெலாந் திரண்டா லனகருஞ் சேற்றி லாயிரந் தாமரை பூத்து [முதுகு
வில்லெலாங் கொளம்வார் முகிலிருந் தென்ன விளங்குவின் வேந்தலை தொ
சொல்லெலாம் பொலிக வெனறுவித் தினர்வெண் டுமுளை யெடுத்தநன றுளிலை.

தளையவ ரிந்து நென்முளை விதைச் சார்தரும் பக்குவத் தன்மை
விளையள வறிந்து மணபதைக் கெல்லாம் விரும்புகன பேரருள் செலுத்தும்
வளையள வறிந்து மேருவில் வாங்கி மாலையைத் தெய்தநா யகன்போன்
முளையள வறிந்து தொழுவர்நீர் பாய்த்த மொய்த்தன வளர்வன முளையே. ()

பரந்தவெண் மேகங் கடறபுன லருந்திப் பசநதன போலவெண் முளைக
ணிரந்தரம் பாயுங் காற்புன லருந்தி நிறைதரப் பசந்தமை நோக்கிச்
சுரந்தவண் களமர் முழுமையும் பறித்துத் தொடரடிச் சேறறக் கழுவிச்
சிரந்தனி லரசா பொன்முடி சேர்க்கச் சீர்தரு பன்முடி சேர்த்தா. (ருங)

பரவுநீ ரொழுக்கிற் செலுத்துவா ரணைய பச்செனு நாறுசெய் யேற்ற
முரவுமா யவனை யீர்த்துவா ரிதிவந் துறினது பொருவுமீ தன்றிக்
கரவுதீர் தொழுவர் கருந்தலைச் சாத்துக் கதுலுமா றெழுந்தன ரென்ன
விரவுபன் முடிதந் தலைமிசைச் சுமந்து மேவினர் கொண்டுபோய் நடுவார். ()

நட்டபன் முதலுந் தாம்புதி தடுத்த நாணில மகட்குற வணங்கி [டுக்கப்
புட்டமைற செழல்போற் சாய்ந்துபி னிமிர்ந்தாங் குமாசர னடியர்கைக்கொ
பட்டதன் பலமொன் றனநதமா வதுபோற் பல்பல கிளைத்தெழும் பொழுதே
யட்டமெய் யுடையா ஞலயத் திடையா லரசென முளைத்தபல் களையே. ()

அறப்பரி பாலரம்பிரான் கோயி லகத்தெழு மாலர சாதி [கு
யுறப்பறித் தெழல்போ னெற்பயிர் வளர்ச்சிக் கூறுசெய் களையெலா மொருங்
மறப்படை நெடுங்க ணுழத்தியர் வயலுள் வயங்குமோ திமமெனப் புகுந்து
நறப்படு களைகள் யாவையுங் களைந்து நகுவரப் பெற்றின ரெழுவார். (ருசு)

ஒருமலர்ப்பறித்துத் தொடுத்தவன் மேனி யொருங்கெரித் தமையுளத் துணர்ந்
திருமலர் முகத்தார் பன்மலர் பறித்துச் செருச்செய வெழுந்தது போல [து
வருமல ரனைத்துங் களைந்தபின் காம முண்மலர் மயக்கம் வெங்கோபம்
வெருமல ரிவைதீர் தவந்தடித் தென்ன வீறின தடித்தபல் பயிரும். (ருஎ)

தடித்தபல் பைங்கூழ் வெண்கதிர்ப் புணர்ந்து தாங்கருக் கொண்டமை தெரிப்
பொடித்தவெண் கதிரம் மதிமுகநோக்கப் போந்தென வான்றலை நிறுவி [பான்
வடித்தநீர்ச் செவிலி நிறந்தெரித் தாங்கு வயங்கவுள் விளர்த்தொரு பாந்தண்
முடித்தபூ நற்றாய் நிறந்தெரித் தாங்கு முழுதுமேற் சேந்தன பின்னும். (ருஅ)

அனையநற் றாயைப் பணிதல்போற் படுத்த வளவையின் மதுக்கவர் பருவந்
துனையவுண் ணோக்கும் வண்டரி னரிந்து தொகுக்குமோர் பருவமுண் ணோக்
வினையவன் களம ரரிந்தனர் சுமந்து மிக்கபோர் செய்துபின் சரித்து [கும்
முனையகோட் டெருமைக் கடாப்பல பிணைத்து முழுமையு முறமிதிப் பித்து.

துன்றுவை களைந்து பதரறத் தூற்றித் தொகுத்தறம் புரிவன புரிந்து
மன்னுமற் றுள்ள முழுமையு மளந்து மன்னவர்க் காறிலொன் றுதவிப்
பன்னுதென் புலத்தா ராதிய ரொடுதாம் பகிர்ந்துண மனையினுய்த் துவப்பார்
மின்னுசெங் கரும்பின் வளத்தொடு பிறவும் விரும்புவார் துழனியே யெங்கும்.

கரும்புமங் கமுகுங் கதலியு மாவுங் கஞல்பொழிற் சிதம்பர மாதி
விரும்புதண் காழி வீழிதென் னாரூர் மிக்கமா யூரம்வே ளூர்சீ
ரரும்பிடை மருதா வடுதுறை குடமூக் கானைக்கா முதற்பல தலஞ்சால்
பெரும்புகழ் மருதப் பெருமையா ருரைப்பார் பேசுவா நெய்தலின் வளமும்.

நெய்தல்.

சுறுமருப் பூன்றித் துணர்மலர் சூட்டித் தொழுந்தொறும் வருணனூர் தோன்றி
யுறுவளம் வலையர்க் கருள்வதற் கிடமா யமைதரு நெய்தலிற் கைதை
மறுமலர் மணத்தான் மறிதிரைக் கடல்வாய் மண்டிய புலவற மாற்றி
யுறுவடுத் தவர்தம் பழிதப மாற்றி யுயர்பவர்க் கினமென வோங்கும். (சுஉ)

வெள்ளிய முத்தங் குளிக்குந ரொருசார் மீன்களை யேற்றுந ரொருசார்
துள்ளிய மீனம் போழ்பவ ரொருசார் துன்றவுப் பிடுபவ ரொருசா
ருள்ளிய வவையாங் குணக்குந ரொருசா ருற்றபுள் ளோப்புந ரொருசார்
தள்ளிய வுணங்கல் விற்பவ ரொருசாரா தவாதவுப் பளப்பவ ரொருசார். ()

திரையெறி புனலுண் முகிற்பெரு முழக்குந் திமில்விடு வார்பெரு முழக்குங்
கரையெறி மறிவெண் டிரைப்பெரு முழக்குங் கழியுழக் குநர்பெரு முழக்கு
மிரையெறி பெருமீ னுணங்கலோ வுணங்க லென்றிசைப் பார்பெரு முழக்கு
முரையெறி நாவா யிழிபெரு முழக்கு மொழிவன வல்லவெஞ் ஞான்றும். ()

மறையெலாம் போற்றி வரம்பெறப் பொலியு மாப்பெருந் தலமும்வெண்
முத்தந், துறையெலாஞ் சொரியு நாகப்பட் டினமுந் தொண்டுசெய் வார்க்க
ருள் புரிந்து, கறையெலா மறுக்க வல்லசாய்க் காடுங் காமரு முல்லைவா யிலு
முட், குறையெலாந் தீரக் கொண்டநெய் தலையார் கூறுவார் திணைமயக் குறை
ப்பாம். (சுரு)

திணைமயக்கம்.

வேறு.

கருவரை யடியமர் கரும்ப லாவடி
மருவமேற் போகிய வனப்ப லாசலர்ந்
தொருவறப் பொலிதிற மொளிசெய் மஞ்ஞைமேற்
றிருவரங் குமரவேள் சிவணன் மானுமே. (௬௬)

சானமர் கருங்குயில் கழனி மாந்தருத்
தேனமர் துணர்கொழு திக்கு லாவுவ
மானமர் வனம்புகூஉ வயல்வெள் ளோதிம
மானமா பால்குடித் தயர்வு யிர்க்குமே. (௬௭)

தளைவய லைக்கொடி தாவி நீலத்தின்
கிளையுற வளைத்தலுங் கிளர்பி னங்கொடு
வளைகடற் றுகிற்கொடி மண்டு தாமரை
யுளைதர வளைப்பன வுடலு மாக்கள்போல். (௬௮)

தினைவன மான்கொள நெரிந்து சாமையைத்
தனைநிகர் குறிஞ்சியிற் றங்கு மான்கொளும்
பனையிளங் காய்புனற் பணையு ளார்கொளக்
கனைகட லாரிலாங் கலிகொள் வாரரோ. (௬௯)

ஏயவிந் நானிலத் தெல்லையெங்கணும்
பாயதம் மொழுக்கருப் பண்பு சால்குடி
மேயநீ நாட்டணி விரித்து ரைத்திட
வாயவே ரறிஞர்க்கு மடங்கு றாததே. (௭௰)

திருநாட்டுப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௦௨.

திருநகரப்படலம்.

கோநக ரெனவுளங் குறிக்குங் கற்பகக்
காநகர் சமழ்ப்புறக் கருது பல்வள
மாநக ரெம்பிரா னமர்கு றுக்கைநன்
மாநகர் வளஞ்சில வகுத்தறுக் கூறுவாம். (௧)

பால்வளை மலர்க்கரன் பதுமக் கோயிலான்
கால்வளை தொறுமவர் கருத்து முற்றுவித்
தோல்வளை கடற்புவி யுவப்ப மேவிடுங்
கோல்வளை யாகனூர் குறுக்கை மாநகர். (௨)

முடியிடை யணந்தனுற் சுமக்க முற்றிய
படியிடை யருளுறப் பதிந்துள் வாரகத்
தடியிடை யின்பமே விளைத்துச் சால்புறுங்
கொடியிடை பாகனார் குறுக்கை மாநகர். (௩)

பூமக டொழத்திரு வழங்கும் வண்கலை
நாமக டொழக்கலை நல்கும் வீரமிக்
காமக னொழவுடல் தளிக்கு மால்வரைக்
கோமகள் பாகனார் குறுக்கை மாநகர். (௪)

பதியெனுங் குறுக்கையே பரந்த பூமிமற்
றதினுறு மாளிகை யவனி மால்வரை
அதிமிகு மப்புவி சூழ்க ருங்கடன்
மதிவள ரங்கர் வளைந்த சோலையே. (௫)

குறுக்கையொன் னகர்ப்புறங் குலவு சோலைய
வெறுக்கைவின் னகமிசை விராய்நி முற்றலா
லொறுக்கைசெய் கதிரின்வெப் பொழிந்து மெய்வியர்
மறுக்கையு மடைந்தனர் வான வாழ்க்கையர். (௬)

நன்றுசா லத்தகு நகர முட்பட
வொன்றுபூஞ் சோலையே யுறைமுகிற்குல
மென்றும்வா னுடர்கண் ணேறு றுவகை
நின்றுமேன் மறைத்திடு நீர்மை யொக்குமே. (௭)

நிறைபுனற் றடத்தக நெடிய கோட்டமர்
குறையறு மலர்த்தடங் கோடு தோன்றுவ
வறைதிருப் பெருங்கட லகத்து முன்னைநா
ளுறைமலர்த் தருவமா நயந்தெ ரிக்குமே. (௮)

அளியகத் தாமரை யகத்துள் ளோதிமஞ்
சளியுறப் பொருந்தலாற் கதிர்ப்ப மேவிடுந்
தெளிபுனற் பெருந்தடஞ் சிறக்கு மஞ்சமே
யொளியகத் தாமரை யுறினு ருதென். (௯)

பூவுடைக் கொடிவிராய் வளைந்த பூங்கழை
மேவுடைச் செறுவெலா மிக்குச் சூழ்வன
சேவுடைக் கொடியர்மேற் சினந்து மீட்டும்வே
ளேவுடைச் சிலைபல வெடுத்தன் மானுமே. (௧௦)

ஒருமதன் கொடியென வுற்ற தங்குலத்
தொருகய லழித்தவற் குரிய சேவொடு
மொருவறப பொருதமே லுலகிற் கேகல்போ
லொருவரு புனற்படந் துகளுஞ் சேற்குலம். (௧௧)

யாரிமேற் கொடிபல வுரிஞ யாள்வியு
மூரிவா னுலகுறிர் பொடியின் மூழ்கியே
சீரியல் வேழங்க டிரித லாலன்றே
பேரியல் மாதங்க நாமம் பெற்றதே. (௧)

கரியுரி போர்த்திய கண்ணு தற்பிரா
னரிபரி யாக்குப நாடி யிந்நகர்த்
திரிபரி நிகர்தராத் திறத்தின் மீட்டுமப்
பரிநரி யாக்கினன் பரவி டாமலே. (௧௩)

அன்னிறத் தொளிர்களத் தண்ண லூர்தரு
பொன்னிறத் தேர்மிசைப் பொலிவி றப்பின
வெந்நிறத் தேர்களு மரிய மேற்செலும்
பன்னிறத் தேர்பயின் மறுகு பற்பல. (௧௪)

அண்டவா ணர்கள்பிரா னழன்று வெஞ்சினங்
கொண்டஞான் றிலும்புறங் கொடாத்தி றத்தினுந்
தண்டமேந் தொருவன்மேற் சமர்கு றித்தெழு
மெண்டவா வீரரு மெண்ணிலா ரரோ. (௧௫)

வேறு.

வளமலி குறுக்கை மாநகர் புகுந்த மாரவே ளந்நகர் மாந்த
ருளமலி வனப்பு மாத்திர நோக்கி யுற்றனன் சோகமச் சோகக்
களமலி நீழண் டெரிந்தன னன்றிக் கல்லிடற் குவந்தநங் கடவு
ளளமலி பூவொன் றிடமுனிந் தெரித்தான் சத்திய மெனலசத் தியமே. (௧௬)

மாரனு ரவிய வனப்புமிக் கமைந்த மைந்தரை வணக்குதல் குறித்தவ்
விரனுர் கவிகை மதியமம் மைந்தர் விழைதரு மாதர்கட் டழகு
கூரனுர் முகமாய்ப் பொலிதலா னன்றே குலவிராப் பொழுதணை தோறுஞ்
சீரனு ரனைய மைந்தரை வணக்கித் திகழ்மதிழ் பூத்தினி தாடல். (௧௭)

நம்மையூ ரிறைவன் றெற்றவிந் நகரு ளும்புக றகாதெனல் குறித்தோ
செம்மைசேர் மடவார் மேனியி னொளியே தின்றிடு நமையெனத் தெளிந்தோ
வெம்மையூழ் மழுங்க விரிகதிர் மாட வியன்மணி நூரக்குமென் றுணர்ந்தோ
வெம்மைவாழ் குறுக்கை யகத்தக விருள்போ யிரிந்தது காண்புறத் திருளும்.

மாளிகை யனைத்து மால்வரை யெங்கும் வாள்விடக் குயிற்றிய மணிகள்
கோளியன் மணிகண் மங்கையர் மயில்கள் குழவிளம் போதகங் குமரர்
யாளிக டுவசத் தருநெடுங் கழைகள் யாத்ததோ ரணங்கறிக் கொடிகள்
வாளியல் வாய்தன் மாமுழை மடவார் வார்த்தையம் மால்வரைத் தேனே.()

ஊடுறு மடவா ரஞ்சிலம் பொலிக்கு முறுசிறு பொழுதல் தொழியக்
கூடுறு மடவார் மேகலை யொலிக்குங் குறிபெரும் பொழுதுமே னிலத்து
நாடுறு மமரர் மனத்தழுக் கறுத்து நாடொறு முறைதலா லன்றே
நீடுறு மசவு மின்றியே யுறங்கு நீர்மையு நீத்தனர் மாதோ.

வேறு.

மாதர்தங் காதும் வள்ளை வாய்வரு பாட்டும் வள்ளை
சூதல்செய் நடையு மன்னங் கைபொழி வனவு மன்ன
மாதர மொழியுங் கிள்ளை யணிமுலை யுறலுங் கிள்ளை
மேதகு தாருங் கற்பே விடுபடா தென்றுங் கற்பே. (௨௧)

கருங்குழ லொலிக்கும் வண்டு கையினு மொலிக்கும் வண்டு
மருங்குல்சாய் முலைசி லம்பு மலரடி யுறுஞ்சி லம்பு
நெருங்குறுபைங் குழலு மஞ்சு நிறைந்துசொட் டிடுமே மஞ்சு
தருங்கரும் புருவஞ் சாபந் தடுப்பரி தவர்வாய்ச் சாபம். (௨௨)

வல்லிய முறழு மைந்தர் மங்கையர் மணவி ழாவிற்
பல்லிய முழக்க மோர்பாற் பரவும்யாழ் முழக்க மோர்பால்
வில்லிய னுதலா ராடும் வியத்தகு முழக்க மோர்பாற்
புல்லிய பலர்க்கு மேன்மேற் பொன்சொரி முழக்க மோர்பால். (௨௩)

திருநலங் கனிந்த மாதர் சீறடிச் சுவடு தோயா
வொருவிய வரங்கம் பொன்செ யுபரிகை மாடங் கூடம்
பொருவரு தெற்றி மைந்தர் பூணணி மார்பந் தின்டோண்
மருமலர்க் குஞ்சி யில்லை வயங்குமந் நகரின் மாதோ. (௨௪)

அறம்பயி லொருவர் செல்வ மடுத்தாரு மடைவ தொன்றுந்
திறம்பயில் வார்த்தை மெய்யே சிறந்தவந் நகர்க்கி டங்கு
நிறம்பயில் சேர்வுங் கீழ்பா தலமுமே னிலவு வைப்பு
மறம்பயி றங்கி டங்கு மதிலெனப் பொலிவ நாளும். (௨௫)

மாரவேட் செற்றார் பாத மனங்கொடு பவஞ்ச வாழ்க்கை
தீரவே துறந்தா ருண்மை தெளிதர வுணையாற் சூழ்ந்த
வீரவே னெடுங்கட் சேனை மேவிவந் திருத்தன் மானும்
பாரவே தண்டக் கொங்கைப் பரத்தையர் குடியு மோங்கும். (௨௬)

இனியன கேட்கக் காண நுழையமற் றிருக்க யாவுந்
துனியன செய்துட் கொண்டு சுமக்கமைந் தருக்கு நாளுங்
கனியன மொழியார் வாழுங் காமரி லாகி லெங்க
டனிமுதல் வாழுங் கோயிற் றுணமோ வுணர்கி லேமால். (௨௭)

உறுப்பினிற் குறைவி லாத வுரியவோ விரத்தி யாரின்
வெறுப்புற மயக்கி யுள்ளும் புறமுமிக் கொத்தார் போலாய்
மறுப்படு மொன்றை யேபன் மைந்தர்க்கும் வழங்கி நீங்கென்
றுறுப்பினு நீங்கா தாங்கே யுழறரப் போகம் விற்பார். (௨௮)

சுரந்தபல் பொருளு நல்கித் தொண்டும்பூண் டொழுகத் தக்க
பரந்தபே ரின்ப மெங்கள் பரம்பரன் பாலு ஞான
வரந்தரு குரவன் பாலு முளதென்பார் மற்றிவ் வூர்வா
ழரந்தடி கண்ணார் பாலு முள்ளதென் றறையா தென்னே. (௨௯)

உடல்பொரு ளாவி மூன்று மொருங்கு கொண் டின்ப நல்கு
மடன்மலி குரவ ரேயோ வறைந்தன வடைந்து ளார்பால்
விடலரி தெனக்கைக் கொண்டு விரும்புறு மின்ப நல்குங்
கடல்விழிப் பொதுமி ஞரோ கடிதருள் செயவல் லாரே. (௬0)

வேறு.

நதிகு லத்தவ ரென்பதற் கியைபுனி தமுஞானத்
துதிமி குந்தவே ளாண்மைசெய் யாற்றலுந் துகடீர்
மதியின் மிக்கசீர் வாய்மையுஞ் சைவநன் மாண்பும்
பதியின் மிக்குவே ளாளர்வா ழிருக்கையும் பலவால். (௬௧)

என்ன வேண்டினும் வினவிடா தேற்கவு மேற்ற
வன்ன யாவையு மினங்குறி யாதளித் திடவுஞ்
சொன்ன யாவையுஞ் சுருதியா கவும்வளஞ் சுமந்த
பன்னரும் புகழ் நாய்கர்வா ழிருக்கையும் பலவால். (௬௨)

உரவு சான்மரு வலர்களைத் தாண்டம ணொருங்கு
புரவு சான்றதாங் கைக்கொடு மற்றவர் பொருந்த
விரவு வானக மளித்திடு வென்றியான் மிக்கார்
பரவு வேல்வல மன்னர்வா ழிருக்கையும் பலவால். (௬௩)

நீடு தீத்தொழி லு●டாறு மோம்பியு நிலவக்
கூடு பல்பசு வுடம்பழித் தும்பழி கூடார்
கேடு மாக்கமு நாவிறு லமைப்பவர் கிளந்து
பாடு மாமறை யாளர்வா ழிருக்கையும் பலவால். (௬௪)

அயன்கொள் சீர்த்தியும் பிற்பட விறைவனு லமைத்த
வியன்கொ டெய்வவே தாகம முணர்ந்தவர் மேன்மே
னயன்கொ டங்களான் மார்த்தமும் பரார்த்தமு நயந்து
பயன்கொ ளாதியஞ் சைவர்வா ழிருக்கையும் பலவால். (௬௫)

எழுது மாமறை யாதிய விலக்கிய மெவையு
முழுது மாகிய விலக்கணங் களுந்தகு முறையே
தொழுது சாருமா ணாக்கர்த மூளங்கொளத் துறுத்தும்
பழுதில் போதகா சாரிய ரிருக்கையும் பலவால். (௬௬)

ஓங்கு மந்திரங் கிரியைபா வனையிவை யொருங்கு
தேங்கு மாறுவந் தடைந்தவர் பெறத்தகு தீக்கை
யாங்கு மேவரப் புரிந்தருட் கலப்புற வமைக்கும்
பாங்கு மேவுநல் லாரிய ரிருக்கையும் பலவால். (௬௭)

ஆயதத்துவத் துருவமுங் காட்சியு மமைவின்
மேய சத்தியும் வாய்ந்துகற் கண்டுமேற் செருக்கற்
றேய பொருண் மூழ்கியொன் றிரண்டற மின்பிற்
பாயு ஞானமா முனிவரா ரிருக்கையும் பலவால். (௫அ)

மோர ளாவிய தெளிவுநீர் நறுமண முகந்து
சீர ளாவிய சுத்தநீர் செறிந்ததெங் கிளநீர்
பேர ளாவிய சுவைக்குள நீர்பெரி தமைந்து
பார ளாவிய நறும்புனற் பந்தரும் பலவால். (௫௯)

கோலு மின்சுவைக் குய்கமழ் கறிகளுங் குணமே
சாலு மூறிய காய்களுஞ் சமைந்தமென் பசுமு
மேலும் பொன்னிறப் பருப்புமின் பாகும் வெண்டயிரும்
பாலு நெய்யுமே யாயசத் திரங்களும் பலவால். (௬௰)

வேறு.

தெருண்மலி மனத்தவர் செறியுஞ் சீருடைப்
பொருண்மலி யந்நகர் புணரி நள்ளிருள்
வெருண்டலிந் தொழிதர விளங்கி னங்கதி
ரருண்மலி தம்பிரா னமருங் கோயிலே. (௬௧)

மன்னுதம் மினமெனு மதிலோர் மூன்றையு
முன்னுவெந் தழல்சுட முயன்ற வானவர்
துன்னுபொன் னகரடத் துணிந்தெ ழுந்தன
மின்னுபன் மதில்களும விண்கி ழித்தவே. (௬௨)

வானக மடவெழ லுணர்ந்து வல்விடம்
போனக மாக்கினோ னேவப் போந்துமேற்
பானகம் பொரவிருந் திருத்தும் பான்மைபோல்
மேனக மதின்மிசை விடைகள் வைகுமே. (௬௩)

உலகளந் தவன்மக னுணர்வு ருதுசெய்
கலகமுட் கொளல்கடைக் கணியென் றாட்டியர்
விலகநின் றெதிர்வரம் வேண்டி நின்றென
விலகநின் றிடுமணி யிசைக்குங் கோபுரம். (௬௪)

குலவய னரியிளங் குறும்பு மாய்த்திட
நிலவணி சடைப்பிரா னின்ற தும்பொருவும்
பொலமணிக் கோபுரம் பொருத்துந் தீபமந்
நலவரைத் தலையொளிர் சிகையெந் நாளுமே. (௬௫)

தனைத்தா மொன்றனைத் தானு மீனுவா
ளினைத்தருங் கருக்கொடு நிலவு நீர்மைபோற்
கனைத்தவண் டடப்புன லகங் கதிரத்தி்டு
மினைத்தெனுச் கோபுரத் தேற்று நீபமே. (௬௬)

தனைவரோத் திடுவது தவிரப் பொன்வரை
நினைபல வுருக்கொடு நிற்றல் போன்மென
முனைமழு ப்படையினுன் முதலி யோரமர்
வினைவலத் தமைபல்பொன் விமான மோங்குமே. (௬௭)

அடுமரு சிறைதக்குருமவே லனுக்கு முண்கண்மை
யிடுமரம் பையாபுண ரிலேகர் வாழ்நகக்
கொடுமர மேருவாக் கோட்டி ஞர்கொரு
கடுமர நிழற்றுமெக் காலு நின்றரோ. (௬௮)

முன்னிய பெருமறை முழங்கு மோதையும்
பன்னிய நால்வர்வாய்ப் பாட்டி ரோதையு
மின்னியம் யானையு மெழுப்பு மோதையு
மன்னிய காலங்க டோறு மல்குமே. (௬௯)

ஆயவிப் பெருந்தளி யகத்தென் னுள்ளமு
மேயனு ளும்பிகை யோடுமெய்ம்மைசா
ஹாயயோ கீசன்வீற் றிருந்து சூழ்பவ
மோயமன் பதைக்கரு ளுதவு நாளுமே. (௭௦)

திருநகரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௫௨.

நைமிசப்படலம்.

மறைமுதற் கிழவன் பாங்கர் மாதவ ரொருங்கு சென்று
நிறைமகிழ் பூப்பத் தாழ்ந்து நெடுநிலத் திடையூ றின்றி
யறைதவ மியற்ற வெங்கட் காவதோ ரிடங்காட் டென்ன
நறைமலி கமலச் சேக்கை நயந்தவப் பிரம ஞேர்ந்து (௧)

தழைதரு தருப்பை நேமி தன்றிருக் கரத்தா லொன்று
விழைதா வியற்றி மண்மே லுருட்டிவிட் டிது விளம்புங்
குழைதரு மனத்தி ரிந்த நேமிபோய்க் குலவத் தங்கு
மழைதவழ் காட்டு வைகி மாதவம் புரிமி னென்றான். (௨)

திசைமுக னுரைத்த வாறே நேமியைத் தொடர்ந்து சென்றோர்
வசையறு மனைய நேமி வளமலி கங்கா தீரத்
தசைவறு காட்டிற் றங்க வன்றுதொட் டதற்கு நாம
நசைவுற வறிவின் மேலோர் நைமிசா ரணிய மென்பார். (௩)

மன்னிய தவத்தோ ராங்கு மகிழ்ந்தினி திருந்து நோற்கத்
துன்னிய வளத்த தாகிச் சுராதிபன் பொழிலு நாண
மின்னிய புகழ்ந்தோங்கி மெல்லிய தளிர்பூ வாதி
யுன்னிய பலவுந் தாங்கி யொளிருமவ் வனமெஞ் ஞான்றும். (௪)

கரியுரி போர்த்த மேனிக் கண்ணுத லிருக்கை யானும்
புரிதவ முனிவர் நாளும் போற்றிடு சிறப்பி னானும்
வரியளி பூட்டுஞ் சாப மாரவேள் பகைமை யானு
மரிதகி வனமே நேரு நைமிச வனமற் றம்மா. (௫)

கூவிளம் பொருந்த லானுங் கொன்றைமா மணத்தி னானு
மூவரு மதிவான் யாறு முனி வுறத்தவழ்த லானு
மோவருந் * துரோணந் † தூர்வை யுடைமையி னானு மெங்க
டேவனார் சடைக்கா டொக்குந் திருந்துநை மிசப்பூங் காடு. (௬)

காமமே முதலாங் குற்றங் கழித்திடா தசுர ராற்று
நாமமே வளர்க்கும் வானோர் நயந்தகற் பகக்கா டென்றும்
வாமமே கலையா ரானை மறலிசெய் நடிக்க மாதி
யேமமே மிகமாய்த் தோங்கு மென்றுநை மிசக்கா டம்மா. (௭)

அறிவமர் தீர்த்த மாகி யாவரு மறியு மாதன்
குறிவெளிப் படுத்தி யாங்குக் கோகன தங்கள் பூத்து
நெறியுற மூழ்கு வோர்க்கு நினைத்தன யாவு நல்கு
மெறிதிரை யறஞ்சால் வாவி யெண்ணில வயங்கு மாங்கண். (௮)

அரசுசம் பீரங் கொன்றை யகவுமா கோவி தாரம்
புரசுமுந் திரிகை கண்டில் புன்னையா மலக மாவேய்
விரசுமந் தாரங் கோங்கு வேம்புவெட் பாலை வன்னி
பரசுகூ விளம் விளாவால் பாரிசா தம்பூ வத்தி. (௯)

தாழையச் சிலைய சோகு சண்பக ஞாழல் பாகல்
வாழைகற் பூரம் வேங்கை மருதுபூ வரசு நொச்சி
யேழிலைம் பாலை சந்த மிலந்தைகுங் கிலிய நாவல்
வீழியே ரண்டம் புன்கு வெண்ணெய்சே புளிமா தேக்கு. (௧௦)

---

* துரோணம் - தும்பை எண்காற்புள். † தூர்வை - அறுகு.

வழைகுருந் திருப்பை தேற்று மாதவி நாரத்தம் பாக்கு
விழைகளா வோமை முன்னை வெட்சி பாதிரி கடம்பு
தழைமகிழ் செருந்தி யாத்தி தாலம்வண் குரா குறிஞ்சி
குழைதரு தான்றி சிந்துங் கொடுங்கருங் காலி வாகை. (௧௧)

நறுவிலி வருணம் பாலை நகுமதுக் காரை காஞ்சி
யுறுகர வீர மித்தி யோடுவில் லழிஞ்சி லீந்து
செறிமணை முருங்கை யாதி செழுமரந் துவன்றக் கொண்டு
நெறியடைந் தவர்க்கு நல்கி நிலவுமக் காடு நாளும் (௧௨)

வளமலி யினைய கான வாழ்க்கையர் வான வேந்தன்
றளமலி மலரின் மேலான் றண்ணறுந் துளபத் தாரான்
களமலி யினையர் தோற்றங் கழிவுபற் பலகண் டுள்ளா
ருளமலி சுவண மோட்டிற் காண்பவ ருயர்ச்சி மிக்கார். (௧௩)

வெள்ளிய நீறு மக்க மணியுமைந் தெழுத்து மேலா
வுள்ளிய மறையின் சார முண்மையென் றட்கொண் டுள்ளார்
தள்ளிய செருக்கர் வாரி தவழினுஞ் சலிப்பொன் றில்லார்
வள்ளிய சிவபிரானைக் கனவினு மறவா மாண்பார். (௧௪)

அவநெறி புகுத்து நூல்க ளனைத்தையுங் களைந்து போக்கிச்
சிவநெறி புகுத்து நூலே சிந்தையிற் றெளியக் கொள்வார்
பவநெறி யொருங்கு மாய்க்கும்பரம் பரன்பாத பத்தித்
தவநெறி வளர்க்கு மேலார் சாந்தமே யுருக்கொண் டுள்ளார். (௧௫)

அகத்தியன் பரத்து வாச ரணிமா ண்டவிய ரனுஞ்
சகத்திய லுணர்தராத சகன்சவு னகன ருக்கன்
மகத்துவ வாம தேவன் வசிட்டனு ரதன் சாபாலி
சுகத்து மார்க் கண்டேயன்விச் சுவாமித்தி ரன்சு வேகயன். (௧௬)

சாமதக் கினியவக்கி ரிதன்பரா சரனெனு ஞான்று
மேமுற் றுயர்ந்தகாத்தி யாயன னிலகு சம்பு
மாமவுற் கலியன்கண்ணு வன்கவு தமன்ற தீசி
நாமமுற் றுயர்ந்தசைவ நற்றுரு வாசப் பேரோன். (௧௭)

தண்ணிய குணத்துச்சாதா தபமுனி யாதி யாய
புண்ணிய முனிவர்பல்லோர் பொலிந்தினி தொருங்கு கூடி
யண்ணிய பன்னிரண்டாண் டளவுசெய் யாக மொன்று
பண்ணிய விரும்பியாரம் பஞ்செய்தா ரனைய காலை. (௧௮)

புராணநீ ரொனைபாருதி யாவையும் பொருந்த வோர்ந்தோன்
தராதல மதிக்கு மேன்மைச் சங்கரற் கன்புசான்றோன்
பராவுமைத் தெழுத்தி னுண்மை பாலிக்கும் படிமச்செல்வன்
சுராதிபன் முதலோ ரேத்துஞ் சூதமா முனிவன்வந்தான். (௧௯)

வந்தமா முனியைக் கண்டு மனமகிழ்ந் தாங்கிருந்த
சந்தமா முனிவர்யாரு மெதிர்கொடு தாழ்ந்து போற்றி
முந்தவா சனத்தி னேற்றி முகமனுன் முறையி னாற்றி
நந்தவா ரிகையி னேரே யிருந்திது நவில லுற்றார். (௨௦)

பொருவரும் யாகமொன்று பொலியயாஞ் செய்யும் போது
மருவருந் தெய்வங்கொண்டு வந்துவிட் டதுநின் றன்னைப்
பொருவரும் பெரியோர்காட்சி போருமோ பயன் படாமல்
வெருவுறும் பிறவியேழும் வேரறுத் துயர்ந்த மேலோய். (௨௧)

இகபர முத்திமூன்றுங் கண்டமாத் திரத்தே யெய்தத்
தகவமர் மூர்த்திதீர்த்தந் தலமொரு மூன்று மிக்க
சிவம்லி வதுவாய்க காணு தென்னனிறுஞ் சிறப்புநல்கி
யவமறுப் பதுவா யுள்ள காதையொன் றறைதியைய. (௨௨)

மூன்றுமெத் தனையோசொற்ற யவற்றுள முதன்மை சான்ற
இன்னுமொன் றியம்பவேண்டு மியம்பிடா தேகல் கூடா
தின்னுமா னந்தக்கூத்த ருவமையில் குஞ்சிதத் தாண்
மன்னுசிந் தையினுயென்று மாதவர் வேண்டி னால். (௨௩)

முனிவர ரிரப்புவார்த்தை செவிபுக முக மலர்ந்து
கனிதரு மனத்தனுகிக் கழறுவன் சூத மேலோன்
புனிதமா தவத்தீர் நீங்கள் புரிந்துண ராததில்லை
யினியதென் முகத்தாற்கேட்ப தென்னிடத் தருளாலன்றே. (௨௪)

என்றுரைத் தன்புகூரச் சிறுபொழு துள்ளத் தெண்ணித்
தொன்றுரை யாடல்செய்யா வொருதலந் துணிந்து சூழ்ந்து
நன்றுநீர் வினயவாறே நவிலுவன் கேண்மி னென்று
கன்றுமும் மலமுந்தீர்ந்த காட்சியோன் கழற லுற்றான். (௨௫)

வேறு.

நலமலியுந் திருக்கைலை நம்மான்பா லருள்பெற்ற நந்திப்புத்தேள்
குலமலியுந் திருவடிக்கே யன்புபூண் டொழுகுசனற் குமாரமேலோன்
பொலமலியு மலரடிகள் போற்றியுயர் வியாதமுனி புகல்புராணம்
வலமலியும் பரமனுக்கோர் பத்தரிக்கு நான்குமலர் மகற்கிரண்டால் (௨௬)

உருகதிர்க்கு மழலவற்குந் தனித்தனியொன் றுகவீ ரொன்பா னென்ன
மறுவில்புரா ணங்களுண்முற் பத்ததிக மவற்றுளொன்றாய் வயங்கி நாளு
நறுமணஞ்செய் சைவத்தே சாதசருத் திரசங்கி தையினன் றுளப்
பெறுபுகழுத் தரபாகங் கேத்திரகண் டத்துரைக்கப் பெற்ற தாய. (உஎ)

அரிதகிமா வனப்பெருமை யிதுகாறு மொருவருக்கு மறைந்ததில்லை
தெரிவரிய மந்தணமா மெண்ணினுங்கேட் கினுமெல்லாஞ் சித்தியாகு
முரியவதை யென்குரவன் வாதரா யணமுனிவ னுரைத்தவாறே
பிரியமுற நமக்குரைப்ப னெல்லேமுத லாகவென்று பேசலுற்றான். (உஅ)

மேவியபா ரதவருடத் தனபாயன் வழிமுதலோர் விளக்கஞ்சான்ற
மாவியலு நீர்நாட்டுச் சையவரை நின்றிழிந்து வருகாவேரி
யோவியதீ வினையாளர் மாத்திரமே பொருளாக்கொண் டுவக்குநீர
தேவியல்கண் மடவாரோ டிந்திரனு மியராடற் கினைந்ததென்றும். (உ௯)

காணினுங்கேட் பினும்பரிசித் திடினுமொரு துளிதலைமேற் கவினப் பெய்து
பேணினுமோர் திவலையருந் தினுமளவாப் புண்ணியமே பெருக்கத் தக்க
தாணினும்வே யினும்பொலியும் வரையுருட்டி வருபெருக்கத் தானூர் கோயி
லேணினுமே விருகோட்டு மெண்ணில்செறி தரக்கொண்ட வியல தம்மா. (௩௰)

இன்னுமறை யவர்கிரக மிருகோட்டுக் கிருகோட்டி னியையப் பெற்ற
துன்னுபல மலர்த்தருக்கள் வல்லிகளக் கோட்டுறைபோ லொருங்கு கொண்ட
தன்னமுத லியபறவை யளாவுமெழி லுடையதிரு வாகலக் கோடு
மின்னமணி பலவெறியு மலையதனைக் கடாகாத மேன்மைத் தென்றும். (௩௧)

உரைசெய்திருக் காவிரிக்கு வடதிசையே யிரண்டுகெவி யூதி யெல்லைத்
தரைசெய்தவப் பயனாய வரிதகியா ரணியமென்றுந் தழையா நிற்கும்
விரைசெய்புக ழத்தலத்தை யெவ்வுயிரு முயவாதி விதிதரான் மேரு
வரைசெய்சிலை நம்பெருமா னென்னிலதன் மான்மியத்தை வகுப்பார் யாரே. ()

மேலொருயோ சனைதூரத் தளவையுயர்ந் ததற்கேற்ப மென்பூ வாதி
பாலொருவாக் கிளைகள்பல மென்மேலுந் துவன்றியெங்கும் பரவிப் போர்க்க
நூலொருவா மதியினரும் வியப்புறநின் றிடுங்கடுவை நோக்கு வோர்க்கு
மாலொருவா வினையொருவ ஞானவை ராக்கியமே வந்து கூடும். (௩௩)

அத்தகைய தருவடியி னலடியிற் பரமசிவ னமர்ந்து ஞான
வித்தகயோ கத்தமவர்வா னவனடிபூ சித்தாதி வேதா தன்னைப்
பொத்தியவி ராசதந்தீர்ந் தவிர்பிரம லோகமே புகுந்து வாழ்ந்து
நித்தியஞா னானந்த முற்றான்சந் திரற்கமல னேரே நின்றான். (௩௪)

என்றமுனி யுரைத்தருளச் சவுனகனெப் புலனுமுயி ரெவைக்கு மீவா
னன்றுயகி ழுத்தலத்தே யத்தருவி னடியோக நயத்தற் கேது
வென்றதெரி தரவேண்டு முரைத்தருள வேண்டுமென வுவந்து சூத
னின்றவிறை வியதொடமெற் றுள்ளனவெ லாம்புகல்வே னெனச்சொல் வானே.

நைமிசப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௮௭.

யோகீசப்படலம்.

---:0:---

அலகில்பல்லுயிர்க்குமின்பமளித்திடுமமலமூர்த்தி
யுலகொருங்கீன்றதாயையொருவியோகிருத்தற்கேது
விலகுறுவண்ணங்கேண்மின்வெய்யபாதகங்கடரு
மிலகுசம்பத்துஞானமிரிதராவாறசேரும். (௧)

நிறைதவவலிமைமிக்கானியமநல்லொழுக்கம்பூண்டான்
முறைபுரிசிருட்டிசெய்வான்முதன்மைசாறக்கனென்பா
னுறைதவப்பெருமையாலேயுலகமுற்றீன்றதாயைப்
பிறைநுதன்மகளாப்பெற்றானவத்தின்மேற்பெரியதுண்டோ. (௨)

சதியெனவளர்மாதேவிசங்கரப்பிரானைவேத
விதிமணம்புணர்ந்தபின்புவெய்யதீவினைக்கோட்பட்டு
மதியழிசிதய்புத்தக்கன்மருமகன்றானேயென்று
பதிகழல்வணங்கானுஞன்பழவினையாரேவெல்வார். (௩)

பின்னரோரிருபத்தேழுபெண்களைப்பெற்றுவானத்
துன்னலூர்ந்தேகுந்திங்கட்குதவிநன்புதல்விமார்சொல்
பன்னருங்கொடுமையாலப்பசுங்கதிர்தேய்கவென்றோர்
முன்னருஞ்சாபமிட்டான்மூர்க்கனைத்தடுப்பார்யாரே. (௪)

கலைகுறைவதுவுங்கஞ்சன்காகுத்தன்முதலோர்தக்கன்
மலைவனென்றஞ்சுமாறுமதிமதித்தான்பாற்சென்று
நிலையருளென்றுதாழ்ந்தானின்மலனலோனுய்யத்
தலைமிசையமையச்சூடிச்சந்திரமோலியானான். (௫)

மேதகவிந்துக்கீந்தான்வெண்பொடிபூசியென்று
பாதகக்குழிசியாயபடர்மனத்தக்கன்சீறிப்
போதகமுரித்தானீங்கப்புரிவனோர்வேள்வியென்று
காதகப்புழுங்கியாருவருகெனக்கழறிவிட்டான். (௬)

தீயவன்விரித்தபோதே திருமறுமார்பன்கஞ்ச
மேயவன்மகத்துவேந்தன்விண்ணவர்திசைகாப்பாளர்
சேயவெங்கதிரோன்றிங்கள்செழுமறையவர்முன்னோர்மண்
மாயவந்தொருங்குமொய்த்தார்வருவதுசற்றுந்தேரார். (௭)

இருடிகள்சிலரைநாடியிருத்துவிக்குகளாத்தாபித்
தருடிரிதிமைத்தக்கன்குண்டமண்டலங்களாதிப்
பொருளமைவேதிசெய்துபோற்றுபகரணம்யாவுந்
தெருடராநாடியாவுஞ்செறிதரச்சேர்த்துக்கொண்டு. (௮)

பொன்புனைவயத்தாள்வாசியிலக்கணப்பொலிவிற்கொண்டு
மின்புனையுலகஞ்சூழவேலையுந்தெரிந்துவிட்டான்
கொன்புனையனையவாசிகுரைகடலுலகஞ்சூழ்ந்து
மன்புனையாகசாலைவந்ததுவலியதாயே. (௯)

புனையிருகதிர்திக்கெட்டும்புரப்பவர்பிரமன்மாயன்
முனைதருவிடுவச்சேனன்முதலியோர்விசுவதேவர்
துனைமருத்துக்கள்வானோர்சொற்றிடாமற்றையோரு
மனைவியரோடும்வந்துமாமகச்சாலைபுக்கார். (௧௦)

முதலவன்மாயையாலேமூடப்பட்டவனேயாகி
விதலைசெய்காலபாசத்தகப்பட்டவெந்தீத்தக்கன்
மதலையந்தொடைப்பிரானோடுமையையும்விளியான்மற்றை
யுதவிசெய்வார்போற்சூழ்ந்தயாரையுமொருங்குபோற்றி. (௧௧)

அவரவர்தகுதிக்கேற்பவாதனமாதிநல்கித்
தவலருங்கேடுசூழ்ந்ததன்மையுள்ளுணராதாகிச்
சிவபிரானிகழ்தையோடுசிறுவிதிமகந்தொடங்கி
யுவமையில்விதியாற்பாதியாகிமேலுஞற்றும்போது. (௧௨)

ஆயதீவினையாற்றக்கனழைத்திடாதிருப்பதோர்ந்தும்
பாயவான்கருணைத்தேவிபரம்பரன்பாதம்போற்றி
நேயமார்கருணைக்குன்றேநின்மலக்கொழுந்தேநாமும்
போயவண்வருவேமென்றாள்புண்ணியப்பிரானீதோதும். (௧௩)

மானமொன்றின்றியென்னவார்த்தைநீசொன்னாயுன்னைப்
போனசன்மத்தவத்தாற்புதல்வியாப்பெற்றானின்னு
ளூனமிக்குறநின்மாயையொருங்குமூடிடப்பட்டானத்
தீனனைப்பிதாவென்றுள்ளல்செறிதருமடமைப்பாற்றே. (௧௪)

திருக்குறுக்கைப்புராணம்

உனக்கொருபிதாவுண்டென்றற்குலகமாதலின்றிநின்
றனக்கவன்மேலாம்வாஞ்சைதணிதியிங்கிருமற்றன்றோன்
சினக்கொடுமூர்க்கனென்னைத்தினங்கொடுந்தீங்கைசெய்வோன்
மனக்கொடுந்துராசாரன்றுர்ப்புத்தியோமதித்தபாவி. (கரு

யாரினும்பெரியன்யானேயெனக்கொளுமகங்காரத்தோன்
சாரினுநின்னையெண்ணுறான்றகாவவமானஞ்செய்வான்
பாரினும்பாரந்தீயபாதகப்பயனையின்னே
காரினுங்கரியக்கூந்தால்கைக்கொள்வான்காண்டிநீயும். (கசு

பசனழியவன்பால்யானும்வருவதுபாங்காங்கொல்லோ
விதமுறநீயேசேறிவேண்டுமேலென்றகூற
முதல்வனையடியிற்றாழ்ந்துமூவுலகீன்றசெல்வி
சுதமில்பேரருளால்மீட்டுந்தொழுதுவிண்ணப்பஞ்செய்வாள். (கஎ

பாதகனெனினுமென்னைப்பயந்தவனெனும்பேர்பூண்ட
காதகனுய்யுமாறேகடைக்கணித்தருளவேண்டு
மாதகவுடையாய்சென்றால்வணங்கிடாதிருப்பான்கொல்லோ
னோதகவொழிதிசெல்வோநோக்குடைநுதலாயென்றான். (கஅ)

என்றலுங்கருணைமூர்த்தியென்னுரைபின்னரோர்வாய்
மன்றலங்குழலாயென்றுமால்விடைமீதிவர்ந்து
பொன்றலில்குலமாதிபொலிதாவுமையாளோடுந்
தன்றிருக்கைலைநீங்கித்தவாவிறற்பூதஞ்சூழ. (க௯)

வந்தியர்புகழ்ந்துபாடமாமறைதொடர்ந்துசெல்ல
நந்திமுன்னெவரும்போற்றிநயந்துமுன்விரைந்துசெல்ல
முந்தியதொண்டரார்ப்பமுகிலிற்பல்லியங்களேங்கப்
புந்தியிலாததக்கன்புரிமகச்சாலையுற்றான். (உ௦)

ஞானக்கண்கொண்டுமோனஞானியருணருஞ்சோதி
யூனக்கண்கொண்டுகாணவுறுதலுங்கொடியபாவி
கானக்கண்மிருகம்போலக்கடுகடுத்தழலநோக்கி
வானக்கணமர்வார்பார்ப்பார்வதனம்பார்த்திஃதுரைப்பான். (உக)

இவனொருதேறிசெத்தாரெலும்பெலாம்பூண்டுகொள்வான்
புவனமுற்றஞ்சும்வெய்யபூதங்கள்சூழவுள்ளான்
சிவமிலாவிடுகாட்டாடுந்திகம்பரன்றுமதஞ்சார்ந்
தவமுறுமிவனைப்போற்றேனென்னவஞ்சாதுகூறி. (உஉ)

சாம்பலைமெய்யிற்பூசுமிவனைத்தன்பதியாக்கொண்ட
தேம்பலைகொளுமருங்குலுமையுமென்சிறுமியல்லள்
சோம்பலைவுடையான்றன்னைத்துதித்திடேனெதிர்சென்றங்கை
கூம்பலைசெய்யேனீருங்கும்பிடீர்துதியீரென்றான். (௨௩)

மறைமுடிவமர்மாதேவன்மான்மியஞ்சிறிதுந்தேரான்
கறைமனக்கொடியதீயகலதிவாய்த்தக்கன்வார்த்தை
முறையெனவகத்துட்கொண்டுமூடவேதியர்வானோரு
மிறைவனைப்பாரார்போலத்தலைகவிழ்ந்திருந்தாரன்றே. (௨௪)

சிறுவிதீயுரையுங்கேட்டதேவர்வேதியரிருப்பு
மறுகுணமுடையபெம்மானறிந்துமைவதனநோக்கி
யுறுவனதெரிந்தாய்கொல்லோவென்றனளொருங்குநாணி
மறுவறுவிடையினீங்கிமாமகச்சாலையூடே. (௨௫)

தக்கனிலுறையும்பன்னசாலையையடைந்தாளங்குத்
தொக்கவருரையாடாமலிருந்தனர்துணைவன்வார்த்தைப்
புக்கதுபுந்தியூடுப்பொருசினந்தலைமேற்கொண்டு
நக்கனள்பாவிநீயோதந்தையானலத்தாயென்று. (௨௬)

புரிதருமகமுநீயும்பொருக்கெனக்கெடுகவென்று
விரிதரவைதுமூலக்கனலைமேலெழுப்பியம்மை
யரியதன்னுருக்கரந்தாள்கண்டவராவாவென்று
பரிதரவுலகமுற்றும்பதறுபுநடுங்கிற்றன்றே. (௨௭)

தேவியங்கடைந்தவாறுமவரவர்செய்தவாறு
மேவியுட்கனலெழுப்பிமேனியைமறைத்தவாறுங்
காவியங்கண்டத்தெண்டோட்கண்ணுதற்சாமிநோக்கி
வாவியவுகாந்தகாலவடவையிற்சினங்கொண்டானே. (௨௮)

பரம்பரன்முனிந்தபோதுபடர்நுதல்விழியினின்றும்
வரம்பறுசெங்கையாவும்வரம்பறுபடைகடாங்க
நிரம்பியவண்டமுற்றுநெறுநெறுநெறுவென்றுக்குத்
திரம்பெருதழியநக்குத்தீவிழிகுருதிபொங்க. (௨௯)

உரவுசால்வடவைச்செந்தீயொருங்குயர்ந்தெழுந்தாலென்னக்
கரவுகூர்பருதிநோக்கிக்கண்வெதுப்படைந்துமூட
விரவுதோளண்டபித்திவெடிபடத்தாக்கமோலி
பரவுவான்றடவவீரபத்திரப்பெருமான்றோன்றி (௩0)

அட்டகாசஞ்செய்தெய்துமத்திறங்கண்டபோதே
கெட்டனமென்றுவானோரோடினர்கிளர்துழாய்மா
லிட்டமார்வேள்விரூபமிரித்துமானாகியோடப்
பட்டரோர்ந்திருந்தபார்ப்பார்பசியொடுமோடினாரே. (௫௧)

ஓடியபேரையெல்லாமொருங்குறவளைத்துக்கொண்டு
நீடியவாளால்வீசிநிலத்தவர்தலையைத்தள்ளிக்
கூடியகொடுமைத்தக்கனெதிர்சென்றுகொடிற்றின்மேலோர்
பாடியகரத்தாற்றாக்கிப்பல்லெலாஞ்சிதறவீழ்த்தி. (௫௨)

மற்றவன்றலையைவெட்டிவாளெரிக்குணவுநல்கிப்
பொற்றொடிமடந்தைமார்களியாவர்க்கும்பொருந்துதண்ட
முற்றுறவியற்றியாருமுடிதரமுனிந்துசாடிப்
பற்றறயாகசாலைபாழ்படுத்தொழித்தான்சீற்றம். (௫௩)

தேவர்தம்பிரானைநிந்தைசெய்தெவர்வாழவல்லார்
பாவவெந்தீமைத்தக்கன்பட்டபாடிதுகண்டீரே
நாவலர்புகழும்வீரபத்திரநாதன்கொண்ட
கோபவெந்தீயவ்வேள்விக்குண்டத்தீயொடுமாய்ந்தன்றே. (௫௪)

கண்ணிலாத்தக்கன்செய்தகடுந்தழல்வேள்விகாத்த
வெண்ணிலாவயன்மாலாதியெலிப்படையனைத்துந்தோல்வி
நண்ணிலாவலிசால்வீரபத்திரநம்பனென்னு
முண்ணிலாவொருமாநாகமுயிர்த்திடக்கெட்டதன்றே. (௫௫)

சிலர்பரம்பிரமமென்றுசெப்பிடப்பட்டமாலுங்
கலர்தொழிறலைமேற்கொண்டகருண்மனத்தக்கன்மாட்டே
யலர்தருமெச்சனாய்ப்புக்கறுப்புண்டான்றலையென்றான்மெய்
புலர்தவில்சம்புமாயைபோக்கவல்லாரும்யாரே. (௫௬)

உலகெலாம்படைக்குமாற்றலொருங்குறப்பெற்றுமுற்ற
வலகில்வேதங்களோர்ந்துமலரணைப்புத்தேளுந்தோ
கலதிவாய்த்தக்கன்வேள்விகலந்துயிரிழந்தானென்றால்
விலகுறாவூழினாற்றல்விலக்குவாரொருவருண்டோ. (௫௭)

நவையிருடனையுமூடக்கதிரவனயனந்தோற்றான்
கவையழல்விழுங்குமாறுதிரட்டியகையிழந்தான்
செவையுறத்தாமொன்றெண்ணத்தெய்வமொன்றெண்ணிற்றென்ப
தவையவிக்களத்துற்றார்பாலறிந்தனமன்றுமாதோ. (௫௮)

சிவபாற்சுடரை நிந்தைசெய்தமாபாவி நல்கு
மவமிகுபுலாவினோடு தக்கனையவாவிப்புக்க
தவமறையோருமெங்கடம்பிரான் வலிமையோர்ந்து
குவலயத்திடைமுட்டுண்டு குனிப்பவர் தமையொத்தாரே. (௩௯)

தண்ணியவருளால்யாகசாலையின்மாண்டோர்க்கெல்லா
நண்ணியவுயிரைநல்கிநகுவிடையுகைத்தெழுந்து
புண்ணியஞ்சோழநாட்டிற்பொலிதலாலுயிர்கட்டோறு
மண்ணியபெருமானெச்சாற்றவரிதுங்கணைதயுற்றான். (௪௦)

அரிதகிப்பெருமைநான்மாலறைதராமுற்றுங்கொல்லோ
விரிதளிரிலையரும்புமெல்லியபூவிளைவுகாய்
பரிதருகாய்முன்யாவும்பரித்திடுங்கோடுதாழ்ந்து
பிரியநன்னீழல்வாய்ந்துபிறங்குவெவ்விந்தநாளும். (௪௧)

விரிந்தவத்தருவைக்கண்டாலாதியும்வியாதியும்போம்
புரிந்தமாபாவமெல்லாம்பொறியுறும்பட்டபஞ்சா
மரிந்தபாசப்பிரானுமத்தருவளமைமுற்றுந்
தெரிந்தவனாகியன்னதருவின்கீழிருத்தல்செய்வான். (௪௨)

அனையமாதருவினீழலளவில்பல்லுயிருண்மேன்மை
தனையவாமுயிர்களின்பஞ்சார்தரும்பொருட்டுவாச
நனையவாமலர்மேலாற்குநாகணைப்பள்ளியாற்கும்
வினையமாமறைக்குமெட்டாவிமலன்யோகத்திருந்தான். (௪௩)

சங்கமேபக்கங்கூர்மஞ்சுவத்திகந்தருப்பூரந்
சிங்கங்கோமுகம்வாசுகர்திருந்தியகளபம்வீரந்
துங்கமார்முசலந்தூபபத்மங்குக்குடமென்றோன்று
மங்கமாரிடம்வாய்மதகபிலவாசனமோரைந்தே. (௪௪)

கடிதரவிலாவிவற்றுளெவ்வெவ்காலங்களுக்கேற்
படியுறவேனையம்மோவப்படியுறவினிதிருந்து
முடிவில்பல்லுயிர்க்குமின்பமுற்றிடயோகஞ்செய்தா
னடிநடுமுடிவிலாதானாயிரவருடமம்மா. (௪௫)

தன்னையேயுணர்ந்தயோகந்தவாதுசெய்தினிதிருக்கு
மன்னையேயனையான்கண்ணிலானந்தவருவியாரப்
பொன்னையேபயவடதிக்கோடிப்பொங்குமோர்நதியேயாய
தென்னையேய்தருமாஞானநதியெனவிசைப்பர்நாமம். (௪௬)

அரிதகிக்கொருகுரோசவளவையினுடைமைந்த
விரிபுனல்யாற்றுமூழ்கில்வெய்யபாதகங்கடரு
முரியமெய்ஞ்ஞானமுண்டாமுள்ளியவினைதருமெய்தும்
பிரியமுற்றதின்மூழ்காதார்பிறவியெப்பிறவிமாதோ. (சஎ)

அன்னமாவனத்தினுறுமரியொடுகரியுமானுங்
கொன்னவிலுகிர்விராயகொடுவரிமாவுமற்று
மென்னவும்விரோதமின்றியினிதுறநட்புவாய்ந்து
மன்னவாழ்ந்திருக்குமென்னினின்மான்மியஞ்சிறியதாமோ. (சஅ)

போற்றுசீர்நாடுசெய்தபுண்ணியப்பயனென்றியாருந்
தூற்றுமவ்வனத்துமேவிச்சுயஞ்சோதியோகிருந்து
சாற்றும்யோகீசனென்றவறிவிக்கதைவேட்போனை
யேற்றுமாற்சிவலோகத்திலென்பதற்கையமென்னே. (சகூ)

போதுசெய்கொன்றைமாலைப்புண்ணியப்பிரான்யோகன்றி
யாதுசெய்தாலுமான்மாநிமித்தமென்றிசைக்கும்வேதந்
தாதுசெய்சடையீர்நாளுந்தனக்கெனவொன்றும்வேண்டான்
மாதுசெய்பாகத்தன்னமறைமுதற்பெருமான்றானே. (ருo)

யோகேசப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - உருஎ.

காமனெழுச்சிப்படலம்.

தக்கன்மகச்சாலையகஞ்சார்ந்துதிருவுருக்கரந்த
திக்களவுபுகழுமையாள்சேணளக்குமிமவரைக்கு
மிக்ககுணமேனைக்குமேதகுபண்ணுளியற்று
பொக்கமறுபெருந்தவத்தாற்போந்தொருபுத்திரியானாள். (க)

பிறவாதுபிறந்துபதுமத்தமரும்பெண்ணமுதை
மறவாதுநோன்புழந்தமலையானுமேனையுங்கண்
டிறவாதுமகிழ்ச்சியெழவெடுத்தணைத்துமோந்துபொரு
ளுறவாதுலரையடைந்ததொக்குமெனவளர்த்தனரால். (உ)

பிறைபொருவவளருமொருபெண்ணரசேழாண்டளவு
முறைசிறுவீடியற்றிடுதல்முதற்பலவாடலினமர்ந்து
மறைவரியகவுமாரமருவுதலுங்கைலாயத்
திறையவனைமணம் [illegible] தன [illegible] னணியியற்றின [illegible] (௩)

கறையின்மதியெனமேனிகதிர்த்திடவெண்ணீறணிந்து
நிறைதருகண்மணிபூண்டுநிலவுமோரிடத்தமர்ந்தே
யிறையவனெப்படியமர்வானிறைவியுமப்படியென்றே
மறைமொழியுமதற்கேற்பமாதேவிதவத்தமர்ந்தாள். (௪)

வன்புமலிபரிதகிமாவனத்தமரும்பெருமானு
ரன்புமலிதேவிபிரிவாற்றுமேயடைவார்போ
லென்புதெரிமேனிமுடியிருந்தபிறைபோல்வளைய
மின்புரிவெண்ணீறிலகவிருத்தவுருக்கொண்டணைந்தார். (௫)

பனிவரையிற்றவத்திருக்கும்பார்ப்பதிமுன்னெய்துதலும்
புனிதைமிகவுபசரித்துப்போந்தீர்யாவிரெனத்
தனிமுதல்வர்கவெனம்வாழ்தவயோகர்நாமடந்தா
யினியதவநீபுரிதற்கேதுநவின்றிடுகென்றார். (௬)

வேதமுடிவுந்தெரியாவிருத்தருரைகேட்டருளி
யேதமறவெவ்வுலகுமீன்றநாயகிபுகல்வா
ளோதநெடுங்கடல்விடமுண்டபிரான்றனைமணப்பான்
காதன்மிகத்தவஞ்செய்வேன்கருணையுறுமளவென்றாள். (௭)

பண்ணமையவினிதுநவில்பார்ப்பதிசொற்கேட்டுநுதற்
கண்ணமையக்காட்டாதவிருத்தர்கனிவாய்மயிலே
புண்ணமையமனந்தவத்துப்பொருந்துவதுதகாதாலு
னெண்ணமையவிப்பொழுதேயென்னைமணம்புணர்ந்திடுவாய். (௮)

பற்றுசுகநுகர்வதற்காம்பருவத்தேநோற்றுடம்பு
வற்றவதுதகுங்கொல்லோவென்றுரைக்கமாதேவி
சற்றுமனமஞ்சாமலென்சொன்னாய்தகவில்லாய்
முற்றுவதுதெரியாயப்பாலகலென்றனண்முனிந்தே. (௯)

தேவியார்முனிவுணர்ந்துமுதிராததிருவிருத்தர்
மேவியாயிரங்கோடியிளங்கதிர்கள்விளங்கியெனப்
பாவியாருணராத்தம்முருக்காட்டப்பயந்தெழுந்தே
யாவியாரடைந்தாரென்றஞ்சலிசெய்தடிதொழுது. (௧௦)

வேறு.

மருவுயோகியர்வந்திக்குமாபரம்பொருளே
யொருவுறாதயனரிமுதற்பலர்தொழுமொருவா
வுருவமோடருவருவுருவொன்பதுமுடையாய்
பொருவுதீர்பழம்பசுபதிநின்னடிபோற்றி. (௧௧)

திருக்குறுக்கைப்புராணம்.

அறிவியாருயிர்க்கருளினாற்றனுமுதலளிப்போ
யறிவியாணவமறைப்பறவறம்பலவமைப்போ
யறிவியாணவக்சலப்பிணின்னடிக்கலப்பருள்வோ
யறிவிமுத்தநின்பொன்னடியடியனேனடைந்தேன். (கஉ)

ஞானஞாதிருஞேயமூன்றளவெனநாட்டன்
ஞானஞாதிருஞேயமூன்றிலையெனநவிறன்
ஞானநாயகமென்பவர்கனவினுநன்று
ஞானநாயகநாடொறுநின்புகழ்நவில்வேன். (கங)

வருதிவாகரன்மதியழல்விழியெனவைத்தாய்
பொருதியானைசீர்ந்தறிதாமழுப்படைப்புராணா
கருதியாதரிப்பாருளங்காணிகொள்பரமா
சுருதிநாயகநின்றிருவடித்துணைதொழுவேன். (கச)

என்றுமுள்ளவெவ்வகைப்பொருள்கட்குமிறைவ
நன்றுதீதிரண்டகன்றபேரொளியுருவயவ
கொன்றுழும்மலங்குலவவின்பருள்பெருங்குரவ
வொன்றபத்துநூறாயிரம்வந்தனமுனக்கே. (கரு)

பொலிதருந்துடிபடைத்திடவபயமேபுரக்க
மலிதருந்தழன்மாய்த்திடவூன்றுதாண்மயக்க
வொலிதருஞ்சிலம்பெடுத்ததாளருளளிக்குவப்பார்
கலிதரும்பொதுநவினடம்பொலிகவெக்காலும். (கசு)

என்றுதோத்திரமியம்பியதேவியையுவந்து
கன்றுமான்மழுக்கையினனருந்தவக்கரும்பே
நன்றுநின்மணநவிற்றுவாம்பின்னெனநவின்றே
யொன்றுமாறறிதகிரிழன்முன்புபோலுறைந்தான். (கஎ)

நிறைந்தநாயகனின்மலக்காட்சிதந்தருளி
மறைந்தகாலையின்மகிழ்ந்துதன்மனைபுகுந்தனையா
னறைந்தவாசகநினைந்திருந்தனள்பரையரன்முன்
னுறைந்தவாறமர்ந்தானுயிர்க்கின்பமீதூர. (கஅ)

உலககாரணராகியவிருவருமொன்றா
விலகயாவரும்போகமில்லாமலேமெலிந்தா
ரிலகவீதுணர்ந்தும்பரம்வேறெனவிசைக்குங்
கலகவூத்தைவாய்மூடரும்வாழ்கவெக்காலும். (ககூ)

பொன்றருவனப்பிளமுலைமங்கையர்போக
மென்றமேவுவோம்யாவருந்துறவியொதநிருந்தோங்
குன்றுவார்சிலைகோட்டியகுழகனென்றருளு
மொன்றுமாறெனயாவருமுளங்கவலுறுவார். (௨௰)

வானநாடருமற்றவர்க்கிறைவனுமலர்மே
லானநான்முகத்தண்ணலுநறவிரைத்துளபக்
கானமாலிலைக்கடவுளும்பிறருமோர்காவற்
றானமெய்தினரிருந்தனர்சகுதியிற்சூழ்வார். (௨௧

வேறு

நாரகன்மனத்துச்சூரனையரிமுகச்சன்வெய்ய
தாரகன்முதலாயுள்ளதானவர்கொடுமையாலே
பாரகமறையோர்வேள்விபண்ணுதலாதிபற்றார்
காரகமறல்கொளாதுகழிந்தனவுலகஞ்சாய்பும (௨௨)

வானகநாடுபுக்குவயங்குபல்பொருள்களோடு
தேனகவளர்பூங்கூந்தற்றிருவனாதமையுங்கொண்டா
ரூனகவொளிர்வாளோச்சியுலகெலாமொருங்குவென்றார்
கானகம்புகுந்துவாழக்கடவதோகடவுளாரே. (௨௩)

காட்டினும்வாழவொட்டார்கானகிரிசைவிழுந்தபோது
நாட்டினும்வாழவொட்டார்நாமினிப்புகுவதெங்கே
யேட்டினுமெழுதமுற்றாவிடாபலசெய்வார்மெய்யாங்
கூட்டினும்வாழவொட்டாகொல்லவமாட்டார்நாளும். (௨௪)

மாற்றலர்மடவார்வாழுமனைதொறம்புகுந்துநாளு
மாற்றலமாகியாற்றலலகிடலாதியாவுஞ்
சாற்றருங்கடல்வாய்மீனநதடியவுங்கற்றுக்கொண்டோந்
தேற்றநாஞ்சித்தையானோந்தேவராயிருந்துகெட்டோம் (௨௫)

காரணமெவனோமாதர்காமமெட்டுணையுமில்லை
மாரனெங்கொளித்தான்கொலவோமாண்டுதான்போய்விட்டானோ
தீரவொன்றுணர்ந்தோருண்மைசெப்பிடவேண்டுமென்னச்
சாரருமதிநூல்வல்லபொன்னிதுசாற்றுவானே. (௨௬)

வரத்தினன்மிக்கோராநாவாள்வலியவுணர்யாரும்
பாரத்தினுயர்ந்தவாதிபகவனையிகழ்ந்துகீழ்மை
யுரத்தினல்வேள்விசெய்தானுடன்கலந்திருந்ததோடத்
திரத்தினலடைந்ததாலித்தீங்கெலாமென்றுதோமின். (௨௭)

திருக்குறுங்கைப்புராணம்.

கடுவனத்தினிறுமேவுங்கண்ணுதல்யோகநீங்கி
வடுவகொக்கடுங்கட்டாயைமணம்புணர்ந்தருள்வாறாயி
னெடுமுடியாறுதாங்குநிகராறுமழுவொன்றுண்டாங்
கொடுமையென்பனவெலாமக்குழவியாலொழியுங்கண்டீர். (உஅ)

அறுமுகக்கடவுடோன்றுமளவுமோரின்பமில்லை
யுறுபுகழ்ப்பெருமான்யோகமொழிதருமளவுநாமோர்
நறுமலர்க்குழலினாரைநச்சிடுநசையுமில்லை
மறுவிலப்பெருமான்யோகமாற்றிடுவாருமில்லை. (உகூ)

அகளனானந்தனித்தனவிகாரணசஞ்சலன்ற
னாசபாதத்தையுள்வாருள்ளுளேயொளியாய்நிற்போன்
சகளநாமறிதலெல்லாத்தற்பரனையான்வெற்பின்
மகளவாவுதலெவ்வாறுவாய்திறந்துரைமினென்றான். (கூ0)

உற்றபொன்மொழிகேட்டின்னேயொன்றுசெய்திடலாமென்று
கொற்றவொள்வயிரவேலான்கொடியிடையிரதியோடு
மற்றருதிணிதோண்மாரன்வருகெனநினைந்தான்வாகை
பெற்றவில்லிரதியோடுவந்தனன்பிறங்குமாரன். (கூக)

வந்தவேள்கையைப்பற்றிவச்சிரபாணியென்பான்
முந்தவேமுகமன்கூறிமுழுமணிப்பீடத்தேற்றி
நந்தவேழுலகமுற்றுநகைமலரோன்றால்வாகை
சிந்தவேவென்றவாகைதிருத்தியதிண்டோளாயே. (கூஉ)

பகைதபவுயர்த்தமீனப்பதாகையாய்துறவுபூண்டார்
மிகைதபவெடுத்துவாங்கும்வேழவெஞ்சிலையாய்மானார்
நகைதபவெழுந்துபொங்குநல்லழகுடையாயெங்க
டகைதபவந்தவாட்டந்தவிர்த்தருள்செயவல்லோயே. (கூங)

என்றவானுடன்கூறுமிம்மொழியுணர்ந்துதென்றற்
கன்றுமேலுலவுமாரன்கருதியதென்னையென்றா
னின்றுநீகடுமாகானத்தெய்தியோகிருக்குஞ்சோதி
சென்றுதேவியைச்சேர்பாக்குச்செய்திடவேண்டுமென்றான். (கூச)

காரவாமூர்த்திவார்த்தைகேட்டலுங்கலங்கியந்தோ
மாரனாயிருக்குமென்னைமாரகனாக்கநீவிர்
தீரவேயெண்ணங்கொண்டீர்செப்பியவிதுநன்றாமோ
பாரவாவறிவீர்நீர்பின்படுவதுதெரிந்திலீரோ. (கூரு)

சிங்கத்தையொன்றுசெய்தல்சிறுமுயற்குட்டியேயோ
துங்கத்தனையுடையபெம்மான்சுவேச்சையனல்லன்கொல்லோ
வங்கத்தையுடையனேனுமயனரிமுதனைப்போலோ
பங்கத்தையெனக்குச்செய்வானெண்ணியபரிசுநன்றே. (௧௬)

நாறுபட்டலருங்கொன்றைநாயகனெதிரேயுள்ள
மாறுபட்டவன்போய்த்தப்பிவருபவன்விழித்துப்பார்த்தா
னீறுபட்டுலகமெல்லாங்கிடந்துட்போமேவாசச்
சேறுபட்டெழுந்ததோளீர்செப்பியவார்த்தையென்னே. (௧௭)

வரதன்யோகிருந்தநாட்டொட்டிதுவரைவனப்புவாய்ந்த
விரதியுநானுங்கூட்டமெய்திலமினியென்வேண்டும்
விரவுநீரடுத்துவேண்டில்வேண்டியபெறவீரின்றேற்
பரவியேத்தெடுப்பீரென்றுபகர்ந்தனன்பகழிமாரன். (௧௮)

மாரவேள்புகன்றவார்த்தைவரைப்பகைகேட்டுரைப்பான்
வீரவேலொருதிக்குமாறும்வெய்யவர்விளியுமாறு
மாரவேய்த்தோளார்கொங்கையாமெலாமணையுமாறுஞ்
சாரவேயுணர்ந்துசொற்றேன்றடுப்பதுதருமமன்றே. (௧௯)

உன்னையானுணரேன்கொல்லோவுன்வலியுரைக்கப்போமோ
வென்னையாயிரங்கண்மேவியிருக்கைவைத்தவனீதானே
முன்னைமால்பிருந்தைவீந்துமுதுசுடுகாட்டுச்சாமப
றன்னைநீங்காதுவைகச்சரந்தொடுத்தவனும்யாரே. (௨௰)

திசைமுகப்புத்தேளென்பான்றிலோத்தமையுருவங்கண்டு
வசையுமெண்ணாதுமாழ்கவாளிதொட்டவனீதானே
யசைவறுயோகத்தின்றுகடுவெடியமர்வானன்று
நசையின்மோகினியைச்சேரநாட்டினான்வேறுளாரே. (௨௧)

கதுமெனக்கரும்புகோட்டிக்கருஞ்சுரும்பிரங்கப்பூட்டி
மதுமலரொன்றுநாட்டிமாதேவன்யோகமோட்டி
விதுமுகத்துமையைக்கூட்டிவெருவெமர்துயரம்வீட்டி
முதுபிரதாபங்காட்டியிடாததென்மொழிதியென்றான். (௨௨)

என்றுவானோடன்சொற்றவார்த்தையையிதமாக்கொண்டு
குன்றுநேர்புயங்கள்வீங்கநிறமிர்த்தெழுந்துகூறு
மொன்றுமெண்ணலிரின்றேசென்றுரைத்தவாமுடிப்பேனென்றான்
கன்றுமூழடுத்தபோதுகடக்கவல்லாரும்யாரே. (௨௩)

கருப்புவிற்சம்பராரிகருத்துடன்பட்டபோதே
பொருப்பிறகரிந்தபுத்தேண்முதலியருவகைபொங்க
விருப்புறுமமுரமூட்டிவிரைசெழுசேறுபூசி
யருப்புமென்பிணையல்சூட்டிப்பாகடையமையநல்கி. (௪௪)

நகுமணிமௌலிவாகுவலயநற்குண்டலந்தேர்
மிகுமணிப்பதக்கமாரமிவைமுதனல்கியின்னே
புகுகவெனத்துநாதன்பொருந்தியோகொழித்துமேன்மேன்
மிகுபுகழ்கோடியென்றுவிடைகொடுத்தனர்வானாடர். (௪௫)

போற்றிமெய்ஞ்ஞானமோம்பும்புண்ணியமுனிவர்யீறுந்
தோற்றியவயன்மாலாதிசுராசுரர்வீறுமங்கை
யாற்றியவாளியொன்றாலலைக்குமெற்கரிதெதன்னென்று
சாற்றியுண்மதர்த்தெழுந்தான்றடுத்தனளிரதிவந்து. (௪௬)

இறைவவென்னினைந்தெழுந்தாயிமையவர்வார்த்தைகேட்டு
மறையவனெடுமாலாதிவானவர்மங்கைமாரோ
டிறையொருநாணுஞ்சண்டமேவுமங்கலமிழந்த
னிறைதரவெண்ணுதொன்மைறநிகழ்த்துதல்பொல்லாங்கன்றோ (௪௭)

எழுபரித்தேரென்றாழையிருளறவிழுங்கினாலுங்
கொழுவியவிருப்புத்தூணைக்குறுஞ்சிதலரித்திட்டாலும்
பழுதறுதழலைவெண்ணெய்ப்பாவைசென்றடர்த்திட்டாலுந்
தொழுதகுபிரானைநின்கைத்தொடுமலர்க்கணையென்செய்யும். (௪௮)

கண்ணுதற்பிரான்மேற்சேறல்காரியமன்றுசொன்னே
னெண்ணுதல்மொழியென்றெள்ளேலுயிருணையின்றியில்லே
னெண்ணுதல்செய்துகொண்டவெழுச்சியைத்தவிரென்றுண்மைய
மண்ணுதல்விழிநீர்செய்யவருந்திமாழாந்துசோர்வாள். (௪௯)

மாதராய்தடுத்தல்செய்யேல்வானவர்வருந்துகின்றார்
காதலாலுலகமூன்றுங்கலங்கவோர்துரும்புசெய்வே
னாதலால்வென்றுமீள்வேனஞ்சலையஞ்சேலென்று
கோதமேன்மேலும்பொங்கக்கொண்டனன்வருவதோரான். (௫௰)

சோரந்துவீழ்கயலும்பாரான்றேளிடந்துடிப்பதோரா
னோர்ந்துதன்றேவிமாழ்கிநிகழ்த்தியமொழியுங்கேளா
னார்ந்துசூழ்மடமையாலேயாயிரமறையுந்தேட
வார்ந்துசெல்பொருண்மேற்செல்வான்மதர்த்தெழுந்தனன்வெங்காம

காமனெழுச்சிப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨௮௮.

காமதகனப்படலம்.

:0:

எக்தெழிலமைந்தபுலோமசைபணைத்தவிளமுலையுழுதழுதுழுக்க
நீந்தருங்களிப்பின்முழுகுதிண்புயத்தோனெட்டிசத்தாமரையார்வோன்
மாந்தளிர்மருட்டு † மாமைசான்மேனிமாமக ‡ நிறத்திறேன்முதலோர்
போந்திடவுரைத்தவார்த்தையேற்றிரதிப்பூவையோடெழுந்தவிற்காமன் (௧)

மணிகெழுமகுடங்குண்டலம்வாகுவலயமொண்கடகமாரணி
யணிகெழுமற்றையாவுமொண்கதிரினவிர்தரக்கடன்முரசார்ப்பப்
பணிகெழுமதியவெண்குடைநிழற்றப்படர்தரு * துணங்கறலென்னுந்
திணிகெழுகரடக்கடாக்களிறுலிப்பச்செழுங்குயிற்காகளமுழங்க. (௨)

பைங்கிளிப்புரவிபற்பலமொய்ப்பப்படர்சுவையமுதமூற்றிருக்குஞ்
செங்கனித்துவர்வாய்க்கருங்குழன்மடவார்சேனைபேருவகையிற்சூழத்
தங்குமெல்விரையார்பாகடையிரதிதளிர்க்கரமுதவினைப்போற்றத்
திங்களஞ்சடையோற்பொருவதுகருதித்திரைக்கடல்சூழ்புவியடைந்தான் (௩)

சேய்மையனேனுமணிமையனேனுந்திருந்துறவிருந்துபத்திமைசெ
யாய்மையின்விருத்தராயினும்பாலராயினுமவர்க்கருள்சுரப்போன்
வாய்மையினியமன்வானவர்சன்மறையுணர்ந்தவர்க்குமோர்வரியான்
றூய்மையசருவகாரணனமலசச்சிதானந்தநிட்களங்கன். (௪)

விரிதருகருணைப்பெருந்திருவுருவன்மேதகுசூக்குமருபன்
புரிதருசுகுணன்றிரிகுணாதீதன்போற்றுபநிடதங்களுரைத்துப்
பரிதருமேன்மைத்திப்பியநாமன்படரொளிப்பிழம்பெனப்பொலிவோன்
வரிதருகடுக்கைமாலையானமரும்வளவரிதகிவனம்புகுந்தான். (௫)

சீதளமந்தமாருதமுலாவச்செய்யபூங்கொடிபலவசையப்
போதளவமரும்வண்டர்பாணிசைப்பப்பொலிதருபசுமயிலகவ
மீதளவெழுந்தமாங்குயில்கூவமேதகுதுறவுபூண்டவருங்
காதளவோடுகருங்கணார்மயலேகருதுமவ்வனங்கண்டுமகிழ்ந்தான். (௬)

மலர்தொறுமறுகாலுழுதுழுதுழக்கமகரந்தம்வீழ்ந்துகட்டழகு
புலர்தலின்மதவேண்மேனியைமறைத்தல்புண்ணியப்பிரானொடுமெதிர்த்தே
யுலர்தருவானென்றுணர்ந்துபைஞ்சோலையொண்மலர்தமக்கிறையவனை
யலர்தருமளியாலமைந்தகாப்பியற்றுமத்தகுதிறம்பொருஉமாதோ. (௭)

---

† மாமை-அழகு. ‡ நிறம்-மார்பு. * துணங்கறல்-இருள்.

கிஞ்சுகம்பலாசுபல்லிடந்தோறுங்கெழுவுறப்பூத்தெனநிற்ப
நஞ்சுகொண்டமுதுசெய்தவனையுளத்துநாடியோகீசன்முன்னின்று
விஞ்சுநின்வாளிதொடுத்திடேன்மதனுவெள்ளறிவாற்றொடுத்திடினுன்
மஞ்சுசெய்மேனியழல்கொளமெழுகைப்போல்வாயெனத்தெரித்திடன்மாறனும். (௮)

அரிதகிவனத்திலையவெம்வினையையரிதகியென்றுவந்தடைவார்
பெரியவர்சிறியர்போகமேவேட்டுப்பெரிதுவந்தடைவர்தம்மேனி
யெரியழல்விருந்துசெய்திடவுள்ளத்தெண்ணிவந்தடைந்தனனென்றாற்
றெரிவருமதனைப்பெரியவனென்கோசிறியவனென்கோவெதுபுகல்வேன். (௯)

கறைமிடற்றிறைமேற்கருப்புவில்வளைத்துக்கணைமலரொன்றுதொட்டிடுவோன்
மிறையறமதவேள்செல்வனோவஞ்சிமீள்வனோவென்றுணர்ந்திடுவோன்
குறையுறுதேவர்பற்பலர்வந்துகூடிநின்றுணர்ந்தனரனைய
முறையுறுமிடத்தைத்தேவருமென்றுமொழிவர்முற்றுணர்ந்தயாவருமே. (௧௦)

அங்கணனளவாவருட்டிருவுருவணரிதகிவனத்தமர்நெற்றிச்
செங்கணன்றிகழ்யோகீசன்மேல்வாளிசெலுத்துவான்றிருந்திழைமடவார்
தங்கணஞ்சூழக்கங்கணம்புதிதுதரித்தனன்மாரனவ்விடத்தைக்
கங்கணம்புத்தூரெனப்புகலுவரக்காரணம்பற்றிமண்ணுலகோர் (௧௧)

அங்குநின்றெழுந்தேயரிதகிவிருக்கமதற்கொருகுரோசத்தினெல்லை
தங்குமீசானதிசையினையடைந்துதழைகழைகுழைதரவாங்கிப்
பொங்குநாண்பூட்டியியலமண்ணூன்றிப்புந்தியெண்பலகொடுநின்று
னெங்குமவ்விடத்தைவில்லியநல்லூரென்றெடுத்துரைசெயுநாளும். (௧௨)

எதிர்முகநின்றுபொருவதற்கஞ்சியெய்துறமேற்றிசையடைவா
னதிர்பொலங்கழற்கான்மாரவேள்வடபாலடைந்துகால்வளைத்துவில்வீரச்
சதிரதுதெரிப்பானின்றனனனையதவலருவளமலியிடத்தை
யுதிர்தவில்புகழ்சால்கால்வளைமேடென்றுலகெடுத்துரைத்திடுமின்னும். (௧௩)

அத்தகையிடமுமகன்றுமேற்றிசைபோயண்ணலார்க்கபிமுகமல்லா
வித்தகையிடமேவாளிநாந்தொடுதற்கியலிடமென்றுளத்துணர்ந்து
சித்தமஞ்சாறுபஞ்சபாணங்கடெரிந்தனனனையகாரணத்தா
லொத்தமாபஞ்சபாணநல்லூரென்றுலகெடுத்தியம்புமவ்விடத்தை. (௧௪)

வளமுறத்தளிர்த்துப்பூத்தவணின்றமாந்தருவொன்றனதடியே
யுளமுறமேவியுயிர்க்குயிராயவொருவனைப்பொருதொழில்பூண்டு
களமுறநின்றோன்கருப்புவில்வாங்கிக்கடிப்புறக்குணத்தொனியெழுப்பித்
தளமுறப்பொலியும்விகசிதமமைந்ததாமரைமலர்தொடுத்தெய்தான். (௧௫)

எய்தசெங்கமலக்கணைபெறுந்தெய்வமென்செய்வாமேழையேமின்று
செய்தவர்மதிக்குஞ்சிவபிரான்பாலுஞ்செல்லுமாறுபட்டந்தோ
வெய்தமைதிமையுறுதன்மெய்யென்றுவிதிர்விதிர்த்தஞ்சபுசென்று
பொய்தருமுளத்துப்பகாதவப்பெருமான்புறத்துறப்பட்டதையன்றே. (௧௬)

பட்டவப்பொழுதேயுணர்த்திடாதெவையும்பளகறவுணர்தரவல்ல
சிட்டனுள்விருப்புவெறுப்பிலனேனுந்தெரிந்தனனுறுதியோடந்தத்
துட்டனுளகந்தையழித்தருள்செயவுஞ்சூழலகுயிரெலாமிதனை
யொட்டகன்குணர்ந்துபிறப்பறுத்துயவுமுறவெருங்கருணையாலெண்ணி. (௧௭)

பூருவமுகமாயிருந்ததுநீர்ந்துபொருந்துபச்சிமமுகமாகி
நேருவதொன்றிற்குறுநகையரும்பநின்மலன்மாரனைநோக்கி
யோருவசிறிதுமுணர்தராய்நின்னைவொன்றிஞன்மபங்குநந்தன்மை
பாருவவென்றுதருவகைசிறிதுபாலலோசனந்திறந்தனனே (௧௮)

திறக்குமுனஞ்சிநடுங்குபுபதறித்தென்றிசையோடினனங்கே
சிறக்குமெம்பெருமானுதல்விழிச்செந்தீநேருறச்சென்றுசுட்டிடலு
நறக்குலமலரேவுடையவனழகுநயத்தகுமேனியுமெரிந்து
பறக்குமொண்கொடியுமிரதமுங்கரியும்பரியுமற்றெரிந்தனமாதோ. (௧௯)

தென்றிசையடைந்துசோர்ந்துவீழிடத்தைச்செப்புவர்சோர்ந்தமங்கலமென்
றன்றியுங்கூற்றுவதியிடங்கூற்றுவாழ்க்கையென்றுரையதுபின்னுங்
கன்றிமெய்வெதும்பிநீறாட்டழிந்துகழிந்தவோரிடத்தினையின்னுங்
குன்றுதலிலாதுசான்றதாநீற்றுக்குட்டமென்றுரைத்திடுமுலகே. (௨௦)

சாக்கியர்பலநாளெறிந்தகல்லெறியுந்தன்றிருமேனியேற்றருணம்
பாக்கியப்பயனுந்தம்பிரான்மதவேள்படர்ந்தொருநாளெறிமதுவந்
தேக்கியகமலமலரெறிபொறாராய்ச்சிவந்தவனுருப்பொடிபடுத்தா
னாக்கியவன்பிற்சிறந்ததொன்றுண்டோவயனரிமுதற்பலவுயிர்க்கும். (௨௧)

அரியயன்முதலோரேவலிற்போந்தவைங்கணைக்கிழவனையுலகந்
தெரியவோர்தென்கீழ்த்திசைக்கிழவனுக்குத்திப்பியவிருந்துசெய்தனைய
பிரியமுற்றுணர்வாரரிதகிவனத்துப்பிறங்குயோகீசனையன்றி
யுரியவான்பிரமம்வேறுமொன்றுண்டென்றுணர்வரோமறவியினேனும். (௨௨)

பொங்குகற்பகத்தார்புனைமணிமோலிப்புலவரைமற்றவர்க்கிறையைச்
சங்குசக்கரக்கைத்திருநெடுமாலைச்சததளகமலமேன்முனியைக்
கொங்குமிக்கெழுமோர்வாளியானிலைமைகுலைதரவருத்துமோர்தெய்வ
மெங்குமுற்றெளிர்வோனுதல்விழித்தழலாலெரிந்துவெண்சாம்பராகியதே (௨௩)

புன்மதந்துலோகாயதமெழின்மடவார்போகமேபொருளெனக்கொண்டு
துன்மதத்ததுநல்லிறையும்வேளென்றேதுணிதலொழிந்துளஞ்சமழ்ப்ப
மன்மதத்தெய்வங்கருப்புவிற்குழைத்துமலர்க்கணையொன்றறவிடுத்துப்
பன்மதத்தவரும்பாணியேவியப்பப்பட்டதுசாம்பரியிற்றே. (உ௪)

தனியெழின்மாரன்விடுத்ததுமுளரிதம்பிரான்விடுத்ததுமுளரி
பனிமதிக்குடையோனெண்ணமுமருளேபரம்பரனெண்ணமுமருளே
கனிவருமதவேணீறுடைமெய்யன்கடவுளுநீறுடைமெய்யன்
வனிதையோர்பாகத்தெம்பிரான்றனக்குமன்னவன்றோற்றிலன்போலும். (உ௫)

அத்திரங்காத்திற்கொடுபொருமதனையத்திரமடைந்தனன்மீட்டும்
புத்திரனாயோகவானந்தப்புணரிபாற்றோணியையிடித்துச்
சத்திரமதியான்பொருஞ்சுவிப்புணரிதன்னகத்தழுந்தினனந்தச்
சித்திரமுணரின்வியப்புறாயாரேதேவர்மானிடர்முதலோருள். (உ௬)

ஆதிநாயகன்பாற்பத்திரயலர்கொண்டடைபவர்யாருமின்படைவா
ரோதியமதவேளொருவனேயமைகொண்டிற்றனவாதனைபுற்றான்
யேதினியிடத்துக்கதிர்வாக்காணும்விழிபெலாம்பெராவிபடையக்
கோதியல்கூகைவிழிகளேகண்டுருடைந்திருளுறல்போலும் (உ௭)

மாரவேளெரிந்துமுடிந்ததுகண்டுவசந்தனோட்டெடுத்தனனஞ்சி
வீரவேலனெடுங்கட்படைகளுமோடிவிரும்புபன்மலர்ச்கருங்கூந்தல்
சோரவேயிரதிதான்மிசைவிழுந்துதுடிதுடித்துப்புரண்டிடலும்
வாரநீர்விழியினையளுஞ்சோர்ந்துமயங்கிவீழ்ந்தெழுந்திதுபுகல்வாள். (உ௮)

வேறு.

கண்கவரும்வடிவமைந்தகட்டழகாமாலிகைத்தோட்காளாய்நாளும்
விண்கவரும்வரிசிலைக்கைவித்தகாசம்பரனைவென்றவீரா
மண்கவருந்திருமுகத்தாயகன்மார்ப்பெருந்திறலாய்மருவுந்தோறெ
னெண்கவருங்குறைகையாயெங்குற்றாயெங்குற்றாயெங்குற்றாயே. (உ௯)

வல்லாருங்களபமுலைப்பூமகளுநாமளுமவானவாழ்க்கை
யல்லாருங்கருங்கூந்தலயிராணிமுதலியசூராரிவைமாரு
மெல்லாருமங்கலம்பூண்டிருக்கநானமங்கலம்பூண்டிருப்பேன்கொல்லோ
வில்லாருங்காதலத்தென்பிராணநாயகவெங்குமேவினாயே. (௩௰)

ஒருகாலுமெனையகலாயகன்றிடுமோரபராதமுனக்கென்செய்தே
னருகாலும்படையுடனின்னலங்காரவருதலையேயவாவிநின்றேன்
குருகாலுமலர்ப்பொழிலுமெனைப்போலவெழிலிழந்துகுழையுமானி
னிருகாலுமுக்காலுந்தொழுவேனென்னெதிரொருகாலெய்துவாயே. (௩௧)

கேடறியாமுதலொடுநீபொரப்போதறகாரென்றேன்கேட்டாயல்லை
வீடறியாவஞ்சனைசெயரிபிரமாதியர்வார்த்தைவீணேகேட்டு
நாடறியாரினதுதிருவுருவமிழந்தனையந்தோநானென்செய்கேன்
பாடறியாவுவளகத்தென்பாகடைகொள்வாரொருகார்படருவாயே. (௩௨)

மட்டுமலர்க்கணையொன்றாற்புவனமுழுவதுமயக்குமாராமாமை
சொட்டுமுகமின்றொருகாற்காண்பேனோபணைத்ததடந்தோள்சேர்வேனோ
கட்டுசடைப்பெருமானோரெதிர்சென்றுசணைதூவிக்கட்டைபாயப்
பட்டுமடிந்தனையந்தோவென்செய்கேனென்செய்கேன்பாவியேனே. (௩௩)

வேறு.

என்றுபுலம்புவள்வீழுவளெழுவணிலமேற்புரள்வள்
கன்றுபிரிதருமாவிற்கலங்குவள்கைத்தலங்கொண்டு
துன்றுமுலைமேற்புடைப்பள்முகத்தறைவயொழிதற்
கொன்றுதுணையில்லாளாயுறத்தளருமவ்வேலை. (௩௪)

இமையாருமிமையாருக்கிறையோனுமறையோனு
மமையாருந்தோட்டிருமாதமர்மார்பப்பெருந்தகையுங்
கமையாருமுனிவரருங்கருடருங்கிம்புருடருமட்
சுமையாருமனந்தனொடுதோலாப்பல்பன்னகரும். (௩௫)

சித்தருமற்றியக்கரும்வித்தியாதரருஞ்சாரணரு
முத்தமநல்வசுக்களும்பல்லுருத்திரருஞ்சூரியரு
மொத்ததிசைபுரப்போருமுரையாதமற்றையரும்
புத்தமுதமொழியிரதிபுலம்புமிடம்புக்கனரால். (௩௬)

எல்லாரும்வரக்கண்டவிரதியெழுந்தவர்முனம்வீழ்ந்
தொல்லாரும்புரிவரியவொருகுய்யமுறப்புரிந்து
கல்லாருந்துதித்திடுமென்கணவனுருயிர்மாய்த்தீர்
பல்லாரும்வாழ்ந்திருப்பீர்பாங்காமோவுமக்கென்று. (௩௭)

கொம்பரிலாக்கொடிபோலக்குழைந்துகுழைந்தறத்துவண்டு
பம்பரமாமுலையிரதிபடும்பாடுதெரிந்தொளிர்பொ
னம்பரமாயவனருகேயடைந்துவிழிநீர்வார
வும்பரவாவருண்முதல்வனுளனீயஞ்சலையென்றான். (௩௮)

பொன்னேயாமெண்ணியதுன்புருடனைக்கொன்றிடுவதற்கோ
வென்னேயாமொன்றெண்ணத்தெய்வமொன்றெண்ணியதெனினுங்
கொன்னேயாம்போகோநின்கொழுநனையெவ்விதத்தானுங்

திருக்குறுக்கைப்புராணம்.

என்றுகெடுமொலிரங்கியிவ்வாறுசொலிப்பின்னுங்
குன்றாகருங்குழன்மாதேசொற்றபடிகேள்பெருமா
னென்றுமலரடியுளத்தேயுன்னிநீதவம்புரிதி
நன்றுவரம்பெறலின்னேநாமுமவன்சரணடைவோம். (௩௦)

அஞ்சாதேயென்றுரைத்தவரிவார்த்தையுளங்கொண்டு
மஞ்சாருங்குழலிரதிமன்னுதவம்புரிந்திருந்தா
ளெஞ்சாதகவேடியோகினிதமருமாதேவர்
தஞ்சார்புபெறச்சென்றார்சக்கரபாணியன்முதலோர். (௩௧)

அருமறைக்குமெட்டானையன்பிலர்பாலெட்டானைக்
கருமதனைச்சுட்டானைக்கருணைசெயமுட்டானை
யிருவினையுமட்டானையென்னுரையும்பெட்டானை
பொருவிறிசைப்பட்டானைபொற்பதியைநட்டானை. (௩௨)

பன்னுமரிதகிநிழலிற்பச்சிமம்பார்த்துறைவானை
மன்னுமுயிர்க்குயிராகிவயக்கமிகநிறைவானை
முன்னுநிகமாகமங்கண்முழுதுமெடுத்தறைவானை
மின்னுமிருதயங்குளிரவிழிகுளிரக்கண்டார்கள். (௩௩)

பத்திமிகவட்டாங்கபஞ்சாங்கத்தொடுபணிந்தார்
சுத்திமிகக்கடுவோடுதுன்னுபலமுறைசூழ்ந்தார்
முத்திமுயல்பவர்க்களிக்குமூலாதமுழுமுதலை
நித்தியநின்மலப்பொருளைநேர்நின்றுதுதிசெய்வார். (௩௪)

ஆயிரமாமுகநயனமாயிரங்கையாயிரம்வா
யாயிரமங்குழைச்செவியோராயிரந்தாளாயிரங்கொண்
டாயிரமாமறைபரவப்பாலாய்நின்றொளிரு
மாயிரநாமம்புனையுமண்ணாநின்னடிபோற்றி. (௩௫)

ஐயனேநினக்கபயமடியார்செய்பிழைபொறுக்குஞ்
செய்யனேநினக்கபயந்திருமறையொண்முடியமரு
மெய்யனேநினக்கபயம்விச்சுவாதிகமழுக்கொள்
கையனேநினக்கபயங்காபாலிநினக்கபயம். (௩௬)

அண்ணாநின்னடிபோற்றியருந்தவஞ்செயாக்கொடிய
ரெண்ணாநின்னடிபோற்றியேற்றமதனுருக்காய்ந்த
கண்ணாநின்னடிபோற்றிகற்பனைதீர்ந்தவிரந்தி
வண்ணாநின்னடிபோற்றிவள்ளாலநின்னடிபோற்றி. (௩௭)

மதிமேவுமுடிதொழுதோம்வயக்குதிருமுகந்தொழுதோந்
துதிமேவுவிழிதொழுதோந்தோலாதபுயந்தொழுதோங்
கொதிமேவுமழுதொழுதோங்குன்றவார்சிலைதொழுதோங்
கதிமேவுகழறொழுதோங்கமழ்ந்தபோருடொழுதோம். (௩௮)

சித்தமாசறுத்தொளிருஞ்செல்வருளத்தகலாத
சுத்தமாமணிச்சுடரோதூண்டாதசுடாவிளக்கே
பத்தமாதவர்மகிழப்பழவினைகண்முழுதொழிக்கு
முத்தமாவரிதகிவாழ்யோகீசவுனைநினைப்போம். (௩௯)

எச்சநாயகபுவனமெமைவக்குநாயகவனவா
வுச்சநாயகபலருமுவக்குநாயகவிமையப்
பச்சைமாமயிறழுவப்படிபுயாசலகருணை
விச்சைநாயகசரணம்வீரட்டேசுரசரணம். (௪௦)

என்றுதுதிபுரிவாருக்கெம்பிரானருள்சுரந்து
நன்றுமக்குவேண்டுவதென்விளம்புமெனவடிதாழ்ந்தே
யொன்றுமடவாரின்பமுற்றிலேமொல்லாரே
வென்றுகொளமிகுதுன்பமேன்மேலுமடைந்தனமால். (௪௧)

எங்கண்மனக்குறைதீரவிமையமயிறனைப்புணர்ந்து
தங்களிருமூன்றுடையகாளையுதித்திடவருளி
யங்கணருள்சுரந்திடுதியரிதகிமாவனத்திலமர்
திங்கண்முடிக்கணிந்தருளுந்தேவாவென்றிரந்தனரே. (௪௨)

இரந்தவரமுழுதருளியினையகீர்செய்ததுதி
பரந்தவெமகவெதிர்துதிப்போர்பாதககந்தீர்ந்துயர்வரென
வரந்தனிதந்தயனரிமுன்வானவர்க்குவிடைகொடுத்து
நிரந்தரமூறருள்சுரப்பநின்மலநாயகனமர்ந்தான். (௪௩)

காமதகனப்படலம் முற்றிற்று

ஆக திருவிருத்தம் - ௪௩.

திருக்கலியாணப்படலம்.

:0:

அரிதகிவனமேவுமண்ணறனருள்வழியே
யரியயன்முதல்யாருமவரவரிடம்புக்கார்
புரிதருசிலநாள்கள்போயினவொருதானே

சுடர்விடுபொஞ்சோதிசுவேச்சையனுதவினாற்
படருலகினர்தவிரப்பார்ப்பதிமணங்குறித்தே
கடலுலகினிதேத்துங்காசிபன்முதலாய
மடனிகுமெழுமுனிவர்வருகெனநினைத்தனனே. (௨)

எழுமுனிவருமுடன்வந்திணையடிமிசைவீழ்ந்து
தொழுதனர்கடுவோடுசூழ்ந்தனரெதிர்நின்று
செழுமறைமுடியமருஞ்சின்மயபரம்பொருளே
பழுதகல்பெருவாழ்வேபணியெவனெனவினவ. (௩)

எவ்வுயிர்களுமின்பமெய்திடவெதுகுறித்து
மைவழிகண்ணுமையைமணஞ்செயவேண்டுவதா
லவ்வியமுதல்யாவுமறுத்துயர்முனிவீர்நீர்
செவ்வியமலையிறைபாற்சென்றுரைத்திவண்வருவீர். (௪)

விரைதரநடமினெனவிடைகொடுத்தருளுதலும்
புரைதபுமவர்தொழுதுபொருக்கெனமகிழ்ந்தெழுந்து
வரையிறையெதிரடையமற்றவனெதிர்வந்து
கரையறுமகிழ்ச்சியொடுகைகுவித்தழைத்தேகி. (௫)

ஆதனத்தினிதேற்றியருக்கியமுதலாய
நீதறுமுபசாரஞ்செய்தனன்கொண்டாடி
மேதகுமுனிவீர்நீர்மேவுதற்கியான்செய்த
மாதவமெவனென்றுவழுத்தினனெதிரிருந்தே. (௬)

கரிசறுநீர்வந்தகாரியமெவனென்ன
வரிதகிவனமேவுமருள்மலியோகீசன்
பரிதருகருணையினாற்பார்ப்பதிமணஞ்செய்வான்
றெரிதரவுளமினெனச்செப்பவந்தோமென்றார். (௭)

என்றலுமலையரசனெழுந்துகைதொழுதாடி
நன்றருள்பெருமானேநயந்திதுகுறித்தனனேன்
மன்றவென்பிறவிதவம்வாசித்தமறையோடு
மொன்றுறவுயர்ந்தனவாலொப்பவரெனக்கென்று. (௮)

உவளகம்புகுந்துவகைமேனைக்குமுறைசெய்து
பவளமெல்லிதழ்ப்புதல்விபார்ப்பதிபாற்சென்று
தவளவொண்பொடிபூசுந்தாபதர்வரவோதி
யிவளவெனுமகிழ்வோடிருடியர்பால்வந்தா (௯)

காசிபனத்திரியொண்கௌதமனொடுவசிட்டன்
கோசிகன்சமதக்கினிகுலவமெய்யுணர்பரத்து
வாசனிவ்வெழுவரையும்வந்தித்துமாமுனிவீர்
நேசமிக்குயாநாளினினைந்தருளியபடியே. (௧௦)

திருமணமினிதாற்றத்திகழரிதகிவனம்வா
ழொருமுதல்யாவரொடுமுவந்தெழுந்தருள்கவெனப்
பெருமுனிவரர்வாழ்த்திப்போயினர்பெருமான்பாற்
றருமலிமலையரையன்றுணிந்துசெய்தனனே. (௧௧)

விச்சுவகன்மனைக்கூய்மணஞ்செயமெய்ம்மறைநூ
லச்சுவனயனுதியமரரோடெழுந்தருள்வா
னச்சுவபன்மணியுநகுமணிமண்டபமுற்
றச்சுவமானமறச்சமைத்திடுகடிதென்றான். (௧௨)

என்றலுமயனுள்ளத்தெண்ணுபுமகிழ்ச்சியொடு
மன்றல்செய்யாயிரக்கான்மண்டபங்கோபுரமே
லொன்றல்செய்மாமதில்களடுக்கியவொளிர்மாடங்
கன்றலிலாதுலகர்கண்கவர்மணவரையே. (௧௩)

தோரணங்கொடியமையத்துன்னியபந்தர்க்கு
நாரணனயன்முதலோர்நயந்துறைதருமிடமும்
பூரணகுடமமையப்பொலிதருவேதிகளுந்
தோரணவீதிகளுஞ்சுடர்விடுமொடரங்கும். (௧௪)

கன்னலுமரம்பைகளுங்கட்டியகாலுடைய
மின்னகுமணிமாடமேற்பொலியரமியமு
மென்னவுமினிதமையாவெழுந்தொருமலையரசன்
பொன்னடிபணிந்துரைப்பப்புந்தியின்மகிழ்பூத்தான். (௧௫)

வேண்டுபகரணமெலாமேதகவினிதீட்டிப்
பூண்டபன்மணிமாலைபுனைபுயம்பூரிப்ப
வாண்டவன்வரவெதிர்பார்த்தணிமலையரசிருந்தான்
காண்டகுதவமுனிவர்கலந்தனர்பெருமான்பால். (௧௬)

வரையிறைசம்மதமுமற்றையர்மனமகிழ்வு
முறைசெயவெம்பெருமான்கேட்டினிதுவந்தருளி
விரைகெழுமலராளிவிண்டுவைமுதலாய
கரையிலர்வருகவெனக்கருதினன்வந்தனரே. (௧௭)

திருக்குறுக்கைப்புராணம்.

மருத்துவர்கணமொருபால்வசுக்கடங்கணமொருபா
லுருத்திரகணமொருபாலும்பர்தங்கணமொருபா
றிருத்தியகந்தருவர்சித்தர்தங்கணமொருபா
லருத்திசெய்திமியக்கராதியர்கணமொருபால். (௧௮)

வாசவன்முதலாயவெண்டிசைமன்னவருங்
கேசவன்கோகனதக்கிழவனுமாதவத்துப்
பேசுபன்முனிவரரும்பிறங்குதன்பன்னியரோ
டாசறமகிழ்ச்சிமிகவரிதகிவனம்புகுந்தார். (௧௯)

வனமலிதரப்புகுந்தார்மாதவரெழுவர்களாற்
கனிகர்களப்பெருமான்கடிமணங்கேட்டருளி
யனநடைமனைவியரோடன்புமிக்குறமகிழ்ந்து
தினகரவொளிப்பரனைச்சென்றுசென்றடிதொழுதார். (௨௰)

புண்ணியமுழுமுதலேபூரணவான்பரமே
கண்ணியமெய்யடியார்கைப்படுமாமணியே
யண்ணியயாங்களெலாமளப்பருமின்படைவா
னெண்ணியதிருமன்றற்கெழுந்தருளுகவென்றார். (௨௧)

மருவரிதகிழலம்வயங்குறவொருதானே
யொருவருமாவிலிங்கவுருக்கொடுபொலிந்தான்பின்
னிருவருமுணரொண்ணாவெம்பெருமானருளாற்
பொருவருமணக்கோலம்பூண்டனன்வெளிவந்தான். (௨௨)

இளங்கதிர்பலகோடியெழுந்தனவுருக்கொண்டு
வளங்கெழுமணிமகுடமணிக்குழைகேயூர
முளங்கவர்முத்தாரமொளிசெய்மதாணிமுதல்
விளங்குபொற்பணிபலவுமிளிர்தரும்படிநின்றான். (௨௩)

அயனரிமுதலானோராகரகரவென்று
பயனமர்கைகூப்பிப்பணிவிடைதலைக்கொள்ள
நயமிகுகணநாதர்நந்திமுன்னோர்சூழ
வியன்மிகுவெள்விடைமேலிவர்ந்தனனுலகுய்ய. (௨௪)

பல்லியமுழக்கமெழப்பண்ணவர்புகழ்ந்தேத்த
வல்லியங்குழன்மடவாரளவிலர்கவரிகொளச்
சொல்லியமணிமுத்தச்சுடர்க்குடைநிழல்செய்ய
கல்லியவெம்பெருமானடத்தினன்வெள்விடையே. (௨௫)

வானவர்கணத்தொடெம்மான்வருவதையுணர்ந்தே
யூனமில்மலையரையனுபாயனமதுவருக்க
மானவையுடனெதிர்கொண்டடிமிசைப்பணிந்தெழுந்து
கோனகர்களிசிறப்பக்கொடுபுகுந்தனன்மகிழ்ந்தே. (உசு)

இகன்மிகுவெள்விடையினின்றிழிந்தொருமாதேவ
னகன்மிகுமாயனயனந்தணர்கைகொடுப்பத்
தகன்மிகுபாதுகைமேற்றமரைப்பதம்வைத்துப்
புகன்மிகுமணவறையிற்போயினிதிருந்தனனே. (உஎ)

மாயவன்முதலாயவானவர்மாமுனிவர்
தூயநன்மலரிட்டுத்தொழுதனர்சூழ்ந்திருந்தா
ராயவப்பொழுதுமகிழ்ந்தமரர்தங்குரவனடைந்
தேயமண்டலங்கண்டம்வேதியங்கினிதாற்ற. (உஅ)

திருமனுவெடுத்தோதிச்சிருக்குறுநெய்பொழிய
வுருகெழுசெந்தீயோன்வலஞ்சுழித்தோங்கியெழ
மருமலர்குழன்மாதைமலிவிரைதுவரப்பிப்
பொருவருபுண்ணியநீர்பொற்பமஞ்சனஞ்செய்தார். (உகூ)

பொன்னொடுமணிபலவும்பூண்டொளிர்பட்டொன்று
தன்னொடுநிகரில்லாத்தாயனைக்கொளப்புனைந்து
மின்னொடுமாறுகொளாவில்லிடுபன்மணிப்பூண்
முன்னொடுபின்னருமம்முதல்விமெய்கொளத்தரித்து. (௩0)

பாலிகைமுளைவயக்கிப்பைம்பொற்கங்கணந்தரித்து
வாலியகோதானமங்களநனிசெய்து
நூலியலிடபமதிநோற்றசுக்கிலபக்கத்
தாலியபஞ்சமிசேர்ந்தாயவுரோகணிநாள். (௩க)

உலகொருங்கீன்றளையோங்குபல்லியமுழங்க
மலர்முகவநிதைமுற்றேழியர்வளைந்துவர
வலரமரிருமாதருகுகைகொடுத்துவர
நலர்தொழக்கொடுவந்துநாயகன்பால்வைத்தார். (௩உ)

மலையிறைமேனையொடுவெள்ளநனெதிர்வந்து
கலைபுகழிறைவிதனைக்கண்ணுதற்பெருமானே
நிலைமையிற்கொள்கவெனநீரொழுக்கினன்றொழுதா
னலைகடன்முழக்கமெனவார்த்தனபல்லியமும். (௩௩)

விதிவழிபுரிகுண்டச்செந்தழல்வீங்கியெழ
வதிசுவைதருபானூறுயிரங்கோதான
நிதிகலைமுதற்றானநிகரிலையெனப்பொழிந்தான்
மதிமலியாவர்களுமலர்மழைபெய்துவந்தார். (௩௪)

நிறைபலவுயிரீன்றநின்மலைதிருக்களத்து
மறைபுகழ்மாதேவன்மங்கலநாண்பூட்டி
கறையறவறம்வளர்க்குங்கையொருகைபற்றி
யுறையழல்வலஞ்சூழ்ந்தாங்கொண்பொரியுறவட்டி. (௩௫)

மங்கலமனையாட்டிமலரடிகரம்பற்றிப்
பங்கமின்மணவம்மிபதிதரமேலேற்றி
யெங்கள்பிரான்வடமீன்காட்டினனினிதிருந்தான்
துங்கவக்கரைதூர்வைதூர்த்திறைஞ்சினர்பலரும். (௩௬)

குலமறைவிதிப்படியேகுறையறச்சடங்கனைத்து
நலமுறச்செய்ததற்பினகுபுகழ்மலையரையன்
வலமணிமகுடாதிமாலயன்முதலோர்க்கு
நிலவுறப்பலகொடுத்தானிரம்புவகையிற்படிய. (௩௭)

தவமுனிவரர்வானோராதியர்தாமெல்லா
மவரவரிடம்புகுவானங்கணன்விடைகொடுத்தே
யுவமையின்மலையரையற்கருள்புரிந்துமையோடுஞ்
சிவமலிகைலாயஞ்சென்றனன்விடையேறி. (௩௮)

மாயவனகலாறுய்வள்ளலைத்தொடர்ந்தேகத்
தூயவனதுகண்டுசுந்தரநெடுமாலே
மேயதென்னுடனென்னவீழ்ந்தடிபணிந்தெழுந்து
பாயவென்றுயரகலப்பண்ணுதியெனவேண்டும். (௩௯)

புண்ணியமறைமுதலேபுத்திரசோபத்தா
னண்ணியவொருநாயேன்மெலிவதுநன்றாமோ
கண்ணியவதுதீரக்கடைக்கணித்தருளென்னத்
தண்ணியமதிமோலிச்சங்கரனிதுகூறும். (௪௰)

வேறு

பொறியமர்மருமமாலேபுத்திரசோகநீங்கக்
குறியமர்கவெனத்தைக்கூடியங்கெமைக்குறித்து
நெறிவளரிரதிநோற்பாளவளொடுகெடுவிற்காமன்
செறிவளர்சாம்பர்மேட்டைச்சேருதிநமைய்யுட்கொண்டு. (௪௧)

பொடிபடுசாம்பரெல்லாம்பொலியவோருருவாச்செய்து
கடிபடுகுலவாவிக்கமழ்புனல்மேற்றெளித்தி
குடிபடுமிடையாண்மட்டுங்காணமுன்னுருவாத்தோன்று
மொடிபடுமற்றையோருக்கனங்கனாயுறைவனும். (௪௨)

அண்ணியநெடியமாலேயநங்கனாகியநின்சேயை
யெண்ணியபலருங்காமமெய்துவரினியநீழல்
பண்ணியகுழலத்திற்பச்சிமமுகமாய்நாமே
புண்ணியவிலிங்கமாகிப்பொலிவம்யோகீசனென்ன. (௪௩)

பிறங்குமிம்மடந்தைதானும்பிகையெனப்பொலிவாளொரு
மறங்குலவொருநமக்குநிருதிதிக்கடுத்தவாவி
பிறங்குமெல்லைக்குநாப்பணிருந்துநீவாசஞ்செய்தி
நிறங்கொளுன்பெயராற்றீர்த்தநிகழ்வொன்றமையச்செய்தி (௪௪)

பிதிர்களுக்குவப்பச்செய்யப்பாற்கரகேத்திரப்பே
ருதிர்தராவண்ணநாட்டியொருகுழலத்தெம்மை
யதிர்வரப்பூசையாற்றியெண்ணியாதடைபோவென்றன்
கதிர்படுநேமிப்புத்தேள்கைதொழுதிருக்கைபுக்கான். (௪௫)

திருக்கலியாணப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௮௬.

——:O:——

காமனுயிர்பெறுபடலம்.

வள்ளலருள்மொழிப்படியேமாயவன்வைகுந்தமொரீஇக்
கள்ளலருமலர்துவன்றுகடுநெடுமாவனம்புகுந்து
புள்ளலருமலர்க்குலப்பொய்கைநறும்புனலாடி
யுள்ளலருமன்பினொடுமொளிதிகழ்வெண்ணீறணிந்து. (௧)

கண்மணிமாலிகைபூண்டுகருத்துறவஞ்செழுத்தெண்ணி
விண்மணிபோற்கடுவெடிவாழ்வித்தகனைமெய்ஞ்ஞானப்
பெண்மணிசேர்பெருமானைப்பிறங்குமதனுடல்பொடித்த
வொண்மணியைக்கண்மணியோடுளங்குளிரப்போய்க்கண்டான். (௨)

கண்டுபணிந்தெழுந்தடிகேள்கைலாயத்துரைத்தபடி
வண்டுபடுமலர்வாளிமாரனுயிர்பெறவேண்டுந்
தொண்டுபடுமெழிலிரதிதுயரமொழிதரவேண்டுந்
தண்டுதலில்புத்திரசோகமுமெனக்குத்தபவேண்டும். (௩)

என்றருகுறையெடுத்தியம்பியினிய திருவருள்பெற்றக்
கன்றுமனத்தொடுமிரதிதவஞ்செய்யுங்கடையடைந்து
மன்றணடநவில்பெருமான்வரங்கொடுத்தபடிகூறி
யொன்றும்வெருவலையென்றுரைத்துநிருதித்திசைபுகுந்தான். (௪)

அம்புவிமுழுமெல்லைநிலைமைதரவோர்தடந்தொட்டு
நம்புபுனற்கங்கைமுதனதிகளையாவாகித்து
வெம்புவினைப்பகுதியறமேவியவப்புனன்மூழ்கிப்
பம்புபலர்கொளவிட்டான்பார்க்கரசேத்திரப்பெயரே. (௫)

பிதிரொலாமனமகிழப்பெருந்தீர்த்தமிதுசமைத்தே
யதிர்வுறவேள்வெந்தகளத்தணியிரதியோடடைந்தாங்
குதிர்தருசாம்பரைத்திரட்டியோருருவமுறச்செய்தே
கதிர்படுநேமிப்பெருமான்கையேந்திக்கொடுவந்து. (௬)

மண்முழுதும்புகழ்குலவாவியகன்சுனைசமைத்து
விண்முழுதும்புகழ்பெருமான்மென்மலர்த்தாளுளத்துன்னி
யெண்முழுதுங்கவரெழுத்தைந்தெண்ணினனப்புனறெளித்தான்
கண்முழுதுங்கவர்வனப்பிற்காமனுயிர்பெற்றெழுந்தான். (௭)

கண்டாளங்கிரதியுமென்கட்டழகாவெனத்தழுவிக்
கொண்டாணெட்டுயிர்ப்பெறிந்தாள்கொண்டதுயரத்தனையும்
விண்டாண்மிக்குவப்புற்றாண்மேன்மேலுங்களிநறவ
முண்டாளென்றிடத்தழைத்தாளுடம்பெல்லாம்பூரித்தாள். (௮)

அடலையுருவமுங்காணனணிமைந்தனுயிர்த்தெழுந்த
விடலையுருவமுங்காணன்விரைத்துழாய்முடிமாயோன்
றொடலையமர்குறுங்கொடிக்கையிரதிதுயரறக்கண்டான்
படலைநறுங்கடுக்கைமுடிப்பரனருளையேவியந்தான். (௯)

சாம்பலுருவுடைமைந்தனெழுந்ததுதன்னுளத்துணர்ந்து
தேம்பலொடுசாம்பலிடைச்சிந்தைமயங்கிப்புரண்டோ
னாம்பலநாளித்தலத்தினண்ணுவமெனண்ணரிதோ
வாம்பல்கமழ்வாய்ப்பிருந்தையணியுருவமெனக்கவன்றான். (௰)

மைந்தனேத்துதலையான்வாய்மொழியாற்கேட்டுணர்ந்து
பைந்துழாய்மாலைமுடிப்பண்ணவனென்றுரைசெய்வா
னிந்தனுணீயடைந்ததெய்த்தனையேயினியேனு
மந்தநாயகனடிசார்ந்தருள்வழியேநில்லென்றான். (௧௧)

மாவேரிதிபொருவெண்குலைப்புனலாடி
யாரணைகடுஞ்சலத்தைத்தரித்ததனிமுதலை
யோரவேவுள்ளொளியாயோங்கியெழுமுள்ளொளியைச்
சாரவேயடைந்துருகித்தண்டப்போற்பணிந்தெழுந்தான். (கஉ)

மனையாட்டிவேண்டுவனமகிழ்ந்துகொடுத்திடப்பெருமான்
றனையாட்டிவில்வமுதற்றண்மலர்சன்பலசூட்டி
வினையாட்டியடியார்க்குவீடுதவும்பெருமானைப்
புனையாட்டிபாகனைமெய்ப்பூசைசிறப்பப்புரிந்து. (கங)

பொல்லாநான்செய்தபிழைபொறுத்தருளும்பெருமானே
கல்லாநானேறினதுகட்டமறுக்கெதிராவேன்
வல்லாநானின்னடிமைமாறாதவன்பருளி
யெல்லாவெம்பவத்துயருமொழித்தருள்வாயெனத்துதித்து. (கச)

மறைபுகன்றேனாம்பிகைபொன்மலரடியும்பூசித்துக்
கறையிலருள்பெற்றிருக்கைகாதலியோடேற்றமர்ந்தான்
குறையின்மனோபவன்பணிந்துகொண்டல்போனிறத்தவனும்
பிறைமுடியோனருளியவவ்விடத்தமர்ந்தான்பெரிதுவந்தே. (கரு)

தாவாதசசிலத்தம்பிரான்றனையடைந்தார்
மூவாதபெருங்கருணைமுகந்துகொளாநனிசாந்து
கோவாதமுத்தமெனக்குலமறைகள்கொண்டாடு
மோவாதஞானமயிலோடுமவனுறைவனேல். (கசு)

இன்றுமொழின்மன்மதனையெரித்தவிழாநடத்திடுவர்
தன்றனையிலத்தலத்தேசற்றிருந்துதவஞ்செய்து
வென்றுமிளிர்மறையோருக்குமுதருக்கின்மிக்கபலன்
சென்றொருராத்திரிவசித்தாற்செங்கைநெல்லியாங்கதியே. (கஎ)

அறிவறியாமையிற்புரிந்தவெம்பாவமனைத்தும்போ
மறிதிரையநெடுஞ்சூலவாவிநீர்புரோக்கணத்தாற்
குறிகெழுஞானம்பிகையோகீசர்முனைக்கொடுஞ்சூலஞ்
செறிபுனல்சாலத்தலமேயெத்தலத்துஞ்சிறந்ததால். (கஅ)

அனையதலத்திருப்பவர்க்குநரகில்லையத்தலத்தே
வனைதிரணபுண்ணியமுமாமேருவெனப்பெருகும்
புனைதருபங்குனிமதியிற்பூருவபக்கத்தடுவிற்
சினைமதவேளுதித்/திதிதெரிந்துமூழ்கிடுவோர்க்கு. (கக

பரிமேதமாயிரநூறிராசசூயப்பலனும்
விரிவாசவுண்டாகுமேலுமைறதநவதநிதியிற்
பரிவாய்விட்டுணுதீர்த்தம்பச்சறுகோணாந்துதலை
யிரியாமலமைத்துவிதியியன்மனுக்கூறுபுமூழ்கில். (௨௦)

பற்பலபோகமுமெய்தும்பழையபவப்பாவமும்போம்
வறட்டுமிச்சன்மபாதகமும்போமரணமும்போ
மற்புதவத்தடங்கரையிலமர்ந்துவிதிப்படிவபனம்
பொற்புறவேசெய்துகொண்டுபுண்ணியவந்நீர்மூழ்கி. (௨௧)

தென்புலத்தார்மனமகிழத்திசழ்சருபிண்டங்கொடுத்தா
லன்புமிகக்கயைமேவியாற்றுசிரார்த்தப்பலனும்
வன்புதவிர்தருப்பணஞ்செய்திடிற்பிதிரர்மிகமகிழ்வ
ரென்புகல்வேனெதிறத்துமிதுசெய்யவேண்டுமெவண். (௨௨)

தங்கைசிரார்த்தம்புரியிற்றசக்கோடியநுசெய்பலன்
முநநூதனுமதியமாவாசியையின்முகுந்தனுக்கு
நந்துநிவேதனம்பண்ணிநகுநயூாயகொடுபோற்றிற்
சந்தமிகுவைகுந்தமடைந்திருநதறப்பாரே. (௨௩)

கும்பமதிப்பூரணையிறகொடுஞ்சிலைக்காமனைப்பெறமா
னப்பனைப்பூசித்துவந்தானத்தினநல்லானைந்து
வம்பவிழுமமுதைந்துவண்புனலகொண்டாட்டியுன்னிப்
பம்புதிருப்பணிசெய்வார்படருவர்சாயுச்சியமே. (௨௪)

பங்குனியுற்சவநடத்திற்பலனைநாஞ்சொல்லப்போமோ
மங்குதலிலத்தலத்துவசிப்பவரேபிறப்பொழிவார்
கொங்குமலர்க்கணைக்காமன்குலவுகதைபடிப்போரு
மங்குநனிகேட்போருமடைவர்கதிசத்தியமே. (௨௫)

இக்காதைசொல்லுநருக்கியலுபகாரம்புரிந்து
மிக்கார்வத்தொடுபோற்றும்விருப்பினனப்பரசிவனே
திக்காலுமிக்கதையைத்தினகரோதயம்படிப்போ
னெக்காலும்யாகபலனெய்துவன்மாதவத்தோரே. (௨௬)

காமனுயிர்பெறுபடலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௪௧௨.

——:0:——

கம்பகரப்படலம்.

முந்துகிரேதாயுகத்திலிரணியனென்றொருதகுவனோர்க்கன்றோன்றி
நந்துபிரமனைக்குறித்தேயொருபதினாயிரவருடநவில்லாக
வந்துகொடுந்தவம்புரிந்தான்மலர்மகனுமவனெதிரேயுவந்துதோன்றிச்
சிந்துசலியாதவனையான்கேட்டவாமுழுதுமருள்செய்துபோனான். (௧)

மண்ணகத்தும்விண்ணகத்தும்பாதலகத்துமிரங்கத்துமணிதராலுங்
கண்ணகத்தும்பொலிதருபற்றிக்கிரண்முதற்பலவாமாயுதங்களாலு
மெண்ணகத்துமுனிவர்முதலியாராலும்பலவிருட்பெறலரிதாலுந்
தண்ணகத்துக்கடிபடைகளொவ்வொன்றாலுஞ்சாவாறோர்த்தவனின்றான். (௨)

வல்லாறோவனையும்போர்புரிந்தமண்டெவர்ந்த்தனைக்காக்காரிக்
கொல்லாதவொருநெடுந்தொழிலுப்புரிந்துமாவுலகமொருங்குமாய்த்து
வெல்லாதவானவர்செல்வமுங்கவர்ந்துமாருதர்பெயலிந்தாமற்றோ
ரெல்லாருமவனைக்குப்பட்டுத்தொடிமைவழிவீழ்ந்திரங்குமேண்ட. (௩)

வேண்டலவானவானவருமடயமலிந்தொருமாபோலம்பெருமோற்று
மாண்டபொமபட்டமரர்க்குயிரளிந்தயோகிசனமலர்த்தாள்போற்றி
யாண்டவாய்கோடுமெனக்கருதியரிமிவனைத்தைதபடைந்தான்முன்போ
லீண்டுபலதபெருநற்சலத்தடப்படிந்தாருவெண்ணீறணியப்பூசி. (௪)

பொலிதருகண்மணிபூண்டங்கிருந்துதிருவைந்தெழுத்தும்பொருந்தவெண்ணி
மலிதருபோருள்பொழியக்கழூலாந்தமரில்லிங்கவாரத்தைமுன்போ
லொலிதருமன்புறத்தாழ்ந்துபுனலாதியுபகாரமொருங்குகொண்டு
வலிதருமாமறைவோதிப்பூசித்துநேசித்துவணக்கஞ்செய்து. (௫)

அடியனேன்புத்திரசோபந்தீர்த்தவருட்கடலேயமையலாகாக்
கொடியமாபாவியிரணியற்செருக்குமொருவரால்கொடிதாயென்ன
நெடியமாதேவனுமவர்க்கருள்சுரந்துபசுந்துழாய்நெடியமாலே
கடியநாண்மலரோன்பாலவன்பெற்றவரமுழுதுங்கருத்தேர்ந்தாயே. (௬)

மருவுநால்வகையோனியொழிந்தரத்தூணின்றுநரமடங்கலாகி
வெருவுதீர்ந்தவெழுந்துபகலிரவெனுச்சந்தியேவிளையன்றான்
பொருவுதீர்மாளிகைவாயிற்படிமேலிருந்துமடிபொருந்தச்சேர்த்தே
யொருவுறுநகங்கொடுகீண்டுயிர்செகுத்திபோதியென்றானுயர்யோகீசன். (௭)

கோனுதவரங்கொண்டுபலதரந்தாழ்ந்தெழுந்துவிடைகொண்டவ்வாறே
மானுதகனைகனமர்மாளிகைத்தூணின்றுநரமடங்கலாய்வந்
தேனுதவவனையெடுத்திருந்துவாய்ப்படிமடிமேலிருத்திக்கொண்டு
பூணுதகூருகிரான்மார்புபிளந்தனன்சந்திப்பொழுதின்மாதோ. (௮)

பாவியிரணியன்மார்பம்பிளந்துநெய்த்தோரத்தனையும்பருகிமீட்டு
மேவிவன்பையாதியெலாமுண்டுவெந்தானடங்காதவெறியேகொண்டு
தாவியமரரைச்சாடத்தலைப்பட்டானுலகுநிலைதளர்ந்துசோர்ந்த
தாவியனையவள்கண்டாள்கம்பமுற்றோர்வரைக்குகைபுக்கடங்கினாளே. (௯)

பொறிகுகைபுக்கடங்குதலுமமரரெலாங்கயிலாயம்பொருக்கென்றோடி
யறியமுறையிடுதலுமாதேவன்வயிரவற்றோற்றியனுப்பவன்றோ
னெறிதிகிரிப்படைமாலேசமனமாகெனக்கேளாவெனைக்குநீயே
நெறிசொலவந்தனோநினைக்குமதிககாலுணர்வாளாநீபோவென்றான் (௧0)

தாவாதவெறியினன்சொற்கேட்டவயிரவப்பெருமான்சரபமாகி
யோவாதவலிக்கருடனுரகவெடுத்தேகுதல்போலுறுகோபத்தான்
மூவாதநகத்தினாலடங்கலைக்கோத்தெடுத்துமேன்மூடுகியென்றும்
பூவாதவெறியொழியநாலுயோசனைபோய்க்கீழ்போகட்டானே. (௧௧)

போகடலுந்தலையுடைந்துநிலையுடைந்துமலையுடைந்தாற்போன்றுமாழ்கி
மாகடனேரிரணியனைப்புத்தோர்க்குடித்தவெறிமுழுதுமாய்ந்துபோக
வாகடவுடனையந்தோவவமதித்தேனெனநடுங்கியச்சம்பூண்டு
நீகடவுசினந்திரநேர்நின்றுதொழுதுதுதிசெய்யுமாலை. (௧௨)

மிருகருணைக்கடலேசிந்தனைக்கடங்காவைபவமேவேதவைப்பே
நருமளவிலாதகுணநீதமேயுரைக்கடங்காநலமேகோடிப்
புருசருவகாரணமேபுகல்பரமகல்யாணபுனிதவாழ்வே
யுருதலினித்தியசரபரூபமேயெனத்துதிக்கவுவந்தானையன். (௧௩)

இன்றுமுதன்மாயவசத்துவச்செயற்கைநினக்குரியதிரியாவண்ண
நன்றுபுவிபுரத்தியெனநவின்றனனீங்கினனெவருநலமேயுற்றா
ரன்றுதனதிருக்கையரியடையவிடுவெச்சேனடியிற்றாழ்ந்து
கன்றுதிருமகளுனதுவெறிகண்டுகுகையொளித்தாள்கரியோயென்றான். (௧௪)

அன்னபொழுதலர்மகளையருகழைத்துச்சிறிதுசினந்தகலமேவு
மின்னனையாயருவருப்பென்மேலடைந்துவெறுத்தனைகைவிட்டும்போனா
யென்னவருவருப்புறினுங்கொண்டானைக்கைவிடுவாரெங்குமில்லை
நன்னயமிலுனைச்சேரேனிப்பாவந்தீரளவுநங்காயென்றான். (௧௫)

அச்சமிகவறியாதுசெய்தபிழைபொறுத்திடுதியண்ணலென்று
கச்சமகல்பெருங்கம்பமுடையாளாய்ப்பணிந்தெழலுங்கரியோனோக்கி
யுச்சமிகுசிவபூசைசெய்தனையேலிப்பாவமொழிந்துபோம்பின்
போச்சமறவடையென்றானென்றலுமற்றவற்றொழுதுபுறத்துற்றாளே. (௧௬)

உற்றதிருமகள்கம்பமொழிக்குமிடப்பூசித்தற்குறித்தென்றெண்ணிப்
பொற்றநெடும்புடவியெலாமுழன்றுமொழிந்திலண்மிகவும்புழக்கம்பூண்டே
யற்றமினங்கடுவெனத்தையடைந்தாளப்பொழுதேதீர்த்தன்றுதொட்டுக்
குற்றமிலாக்கம்பாசரமாயதற்சகிவனமெய்க்குணமிக்கோரே. (௧௭)

முன்னமரிசகிவனம்பின்யோகீசபுரம்வணங்கண்முற்றமேய
பன்னருமெய்ஞ்ஞானம்பிகைபுரமொண்புனல்வாவிப்பதுமந்தேசறு
மன்னமமர்தருகாமதகனபுரங்காமதேனுவிரதைக்தமூதூர்
யன்னவொளிர்கம்பகரபுரமெனவிப்பெயர்பலவும்வயக்குமாலோ. (௧௮)

கம்பகரப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௪௩௦.

—— :0: ——

இலக்குமிபூசைப்படலம்.

கள்ளலரோதி
யெள்ளருமாக்க
முள்ளமர்கம்பம்
விள்ளமகிழ்ந்தாள். (௧)

வரமிகுகம்ப
கரபுரமென்றோர்
திரமுறுநாமம்
பரவமொழிந்தாள். (௨)

இத்தலமேன்மை
யெத்தலமெய்துஞ்
சுத்தமதாய
வுத்தமமென்று. (௩)

மேவியகூல
வாவிபடிந்து
காவியங்கண்ணி
யாவிகுளிர்ந்தாள். (௪)

கடுவடிமேய
வடுவில்பிரானை
விடுதலிலன்பு
கொடுபணிந்தேத்தி. (௫)

தகைதருஞானம்
பிகையிருதாளும்
பகையறப்போற்றி
நகையினெழுந்து. (௬)

ஒளிசெய்பிராற்கு
வளியுறுதிக்கி
லளிசெயிலிங்கந்
தெளிவினிறுத்தி. (௭)

தன்பெயராலோர்
மென்புனல்வாவி
யின்புறயாரு
மன்பினுண்டாக்கி. (௮)

கங்கைமுனைய
மங்களதீர்த்தம்
பொங்கியதன்கண்
டங்கவமைத்து. (௯)

புனிதமதாகி
யினிதமரன்ன
பனிபடுதீர்த்த
முனிவறவாடி. (௧௰)

வேறு.

அன்னபுனலெடுத்தாட்டியங்கமர்தன்பெயரிலிங்கந்
தன்னையினிதருச்சித்துத்தாழ்ந்துபணிந்தேத்தியபின்
மின்னைநிகர்நுண்ணிடையாண்மேவியபச்சிமமுகமா
முன்னரியகடிமூலத்தொளிர்பெருமான்முன்புகுந்து. (௧௧)

ஒருகுரோசத்தளவினுத்தரதிக்கிடையோடும்
பெருகுமாபுண்ணியமெய்ஞ்ஞானதிப்பெரும்புனலு
மருகுகூலத்தடமென்றுக்கியயோகப்புனலுந்
திருகுநீர்மருத்சமருந்திசையொருதன்றடப்புனலும். (௧௨)

தன்னுடைநாயகனிருதித்திசையமைத்ததடப்புனலும்
பொன்னுடையப்பொலிதிசைப்பூண்முலைமாமுகக்காட்டி
மன்னுடையாருக்கயிலம்மையயிராதேயனைந்தருந்
தென்னுடையவிளக்ராயனந்துசெழுவிரைச்சாந்தம். ௧௩

இனியபான்முதற்பலவுமெடுத்தெடுத்தன்புறவாட்டிக்
கனியவாமொழிமடந்தைசருகெய்தல்புன்னைம்
பணியவாந்துரோணமகிழ்பைந்துழாய்நறுமலரோ
னனியவாம்வில்வமுதற்றுபெயுபற்பலசூட்டி. (௧௪)

திருவாறாதுங்கதியமுதுருசிற்றுணவின்பல்வகையு
மருவுவிருப்பொடூட்டிவயங்குதீபமுங்கோட்டி
பொருவுதவிர்கருப்பூரப்புண்ணியதீபமுங்காட்டித்
திருவுபசாரம்பிறவுஞ்செய்யாமலினிதாற்றி. (௧௫)

சாந்தகுணவிமலானம்சங்கரகங்காதரசா
மாந்தகயோகிசபவவரிப்பிரியவிசுவபர
சீந்தரியபவநாசநித்தியநிட்களபுவன
வேந்தபசுபதிநிமலவீரட்டேசுரசரணம். (௧௬)

கூவியினிதடியர்பணிகொண்டருளுமெய்ப்பெரும
தேவியோர்பாலுடையதிவ்வியமங்களசுகுண
காவிநிகர்களசகளகருதருநிட்களபுனித
மேவியருள்பெருங்கருணைவீரட்டேசுரசரணம். (௧௭)

கடுவடியின்முளைதெழுந்தகரும்பேநின்னடிபோற்றி
கொடுவரிவென்றுடுத்தகுணக்குன்றேநின்னடிபோற்றி
வடுவரியமனம்பதியுமணியேநின்னடிபோற்றி
நெடுமறைகளளப்பரியநிதியேநின்னடிபோற்றி. (௧௮)

சிந்திக்கவரிதாகுஞ் செந்தேனே நின்னடி போற்றி
வந்திக்கவுயர்த்து மருமருந்தே நின்னடி போற்றி
சந்திரசெப்பமலைவிரச் சுருவே நின்னடி போற்றி
கைத்திக்கவெழுங்கருப்பக் கடவேளே நின்னடி போற்றி. ௧௯

அத்தா நின்னடி போற்றி பரிகரிமுலைக்குமரு
முத்தா நின்னடி போற்றி பூமுதலவெவையுங் காக்கும்
பித்தா நின்னடி போற்றி பொருவருமுழுவோ
நித்தா நின்னடி போற்றி நின்மலா நின்னடி போற்றி. ௨0

என்றுயர்திருவடிக்கீழ்ப் பியம்பிவீழ்ந்தெழுந்தெழுந்து
வென்றுயர்பரிக்குமுலமேவியபெயரிசையுந
நன்றுறுபசிவிலைக்குமிச்சையுநலமுறப்பூசித்த
தொன்றுமனமுடையாளையுவந்துவருமத்தவில். ௨௧

விழிதகனைய்கதிர்தோன்றிவென்றியரதூன்றுவையவென்ன
பூத்தநிகாவெண்டூலமுளரிமாமலர்மடந்தை
யத்தவொருநின்னடிக்குமனமானின்வெருபாகத்
தூத்தமின்பொன்னடிக்குமோவாவனபெனக்குறுக. (௨௨

வெறிகொண்டமாயவனைமேவாதுநீர்ந்தழையாற்
செறிகொண்டவென்பாவந்தீரநெறிகயாளியற்று
குறிகொண்டபெருந்தீர்த்தங்குடைந்துயான்றுடிக்த
மறிகொண்டசெங்கைநினைவந்திப்போர்திருவுறுக. (௨௩)

யான்செய்தருதியைநினர்கெதிர்செய்வோரின்புறுக
தேன்செய்தவிவ்வரங்கள்சிறியேற்குவேண்டுமென
வூன்செய்தமழுப்படையாளுெருங்குகொடுத்தனன்மறைந்தான்
மான்செய்தவிழிக்கமலையகிழ்ந்துவிடைகொண்டெழுந்தாள். (௨௪)

தன்பதியையுளத்துன்னிச்சார்ந்துசூலத்தடந்தோய்ந்
தன்பதிகங்கொளவேகியரிதகிமூலத்தமரு
மென்பதிகவரப்பரனையேத்திவிடைகொண்டருளி
யன்பதிபுள்ளிவர்ந்தடைந்தான்மாவிறைமாயவனே. ௨௫

இலக்குமிபூசைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௪௫௫.

——:0:——

திருக்குறுக்கைப்புராணம்.

குமாரபூசைப்படலம்.

———:o:———

மயிலைநேர்சாயலாளையாமணஞ்செய்துகொண்டுக்
கயிலைமால்வரையைச்சார்ந்தகண்ணுதற்பரமயோகி
வெயிலையேயீசயோவிவிண்ணவர்கருவப்புகசெய்வான்
குயிலைநேர்மொழியாளோடுகூடியாட்டயர்ந்தானன்றே. க

ஆயிரவருடமிவ்வாறளவளாயாடுங்காலை
மாயிருவிசும்புவெளவுவன்றொழிற்றருவர்க்கஞ்சி
மீயிருஞ்சுரர்களெல்லாம்வெள்ளியங்கிரியைச்சார்ந்து
பாயிரமறையுந்தேறாப்பண்ணவபயமென்றார். உ

தேவர்தமபயங்கேட்டுத்திருப்பெருங்கருணைசெய்து
மூவருமறியவொண்ணாமுதலுவளகத்தைநீங்கி
யேவரவெளியேவந்துமிளிர்சத்திதிருமுகத்தோ
டாவருந்திருமுகங்களாறடைந்தங்கமர்ந்து. ௩

அறுநுதல்விழியினின்றுமறுபொறிசிதறவந்த
மறுவருபொறிமேலோங்கவானவரச்சந்தீர்ப்பான்
சிறுபொறியாகச்செய்துசேயுமைவளியைக்கூவி
யுறுபொறியிவற்றைக்கைக்கொண்டுய்த்திடுகங்கையென்று. ௪

ஆற்றலுநல்கக்கொண்டானவனவர்யாறித்தாங்கி
யூறறமார்கங்கையாற்றின்விடுதலுமதுவுமஞ்சிப்
போற்றுறுஞ்சரவணத்திற்புகவிடுத்ததுபுக்காங்குத்
தோற்றமோர்ந்தமரர்யாருஞ்சூழ்ந்துகாத்திருந்தாரன்றே. ௫

இளங்கதிராறோர்காலத்தெறிசுடன்முளைத்தாலென்ன
வளங்கெழுகுழவியாறுவயங்குமப்பொய்கைதோன்ற
வுளங்குளிர்ந்தமரர்யாருமொருங்கறுமீனைக்கூவி
விளங்குபால்கொடுக்கவேவிவீறுறவளர்த்தாரன்றே. ௬

மழமகவுதையங்காண்பான்மால்விடையுமையோடேறிக்
குழமதிமுடித்தபெம்மான்குறுகினனங்கப்போதே
யழகியவுமையாள்செஞ்சேயாறையுமணைத்துக்கங்கை
தொழவருமாறிராறுவிருந்தவாதுலங்கவிட்டு. ௭

திருவடியிரண்டுமேனி திகழுமொன்றாகச்செய்து
மருவருமார்பிற்சேர்த்து மாமுலையூட்டவுண்டு
பொருவருவனப்புவாய்ந்து பொலிந்ததுகுழவிதேவி
யொருவருமாசைகொண்டேயுற்றனன்பரமன்பாங்கர்.

மால்விடையுகைத்துவெள்ளிமால்வரையடைந்தானையன்
பால்வருபிறைபோன்மைந்தன்வளர்ந்துபல்விளையாட்டாற்ற
மேல்வருமமரர்சேனைவேந்தனீயாகவென்று
சால்புடைப்பட்டங்கட்டிச்சங்கரன்பாதந்தாழ்ந்து. (௯)

ஐயவெவ்வசுரர்தீமையறுத்தருள்செய்தியென்னச்
செய்யதன்மகவைக்கூவித்திசழ்தமவணைத்துமோந்து
கையமர்நெல்விமாறுங்கடனதுசெமைப்பூசித்து
வெய்யவல்லசுரர்ச்சாடிவிண்புரந்திடுகவென்று. (௧௦)

சத்தியொன்றங்கைநல்கித்தவாப்பெரும்படையுங்கூட்டி
முத்தியெண்ணினர்க்குநல்குமுழுமுதல்விடையுநல்கப்
பத்தியிற்பணிந்துதந்தைநயங்கயப்பாதம்போற்றி
சித்திபெற்றெழுந்தானெங்கள்சிந்தைவீற்றிருக்குஞ்செவ்வேள். (௧௧)

வானவர்கணமும்பூதகணங்களுந்தொடரவந்து
கானகமெனைகருமேலாமரிதகிக்காட்டையுற்று
ஞானநல்யாற்றுமூழ்கிகுதிரிசூலகங்கை
யானவண்புனலுந்தோய்ந்தானரிதகிமூலமுற்றான். (௧௨)

பிறங்குயோகீசர்ஞானம்பிகையிருவரையுங்கண்டு
நிறங்கிளர்புவியிற்றேயருரேயெனப்பணிந்தெழுந்து
மறங்கிளரவுணர்ச்சாடிவாகைகொள்வரங்கொள்வான்மிக்
கறங்கிளர்பூசையாற்றியன்பினாற்றுதித்துவேண்ட. (௧௩)

சடுவடிமுளைத்தயோகிகாதலற்கருள்சுரந்து
விடுசுடர்ச்சூலமொன்றுமேவுறகொடுத்துவானை
யடுதிறற்றகுவராவியழித்தடைவாகையென்று
தொடுகழற்குமரன்றனைத்தூயயோகீசனேவ. (௧௪)

விடைகொடுதொழுதுபோந்துவிண்ணவர்தமக்குநாளு
மடையலராயதாரகாசுரனாதிவெய்யோர்
படையொடுமடியமாய்த்துப்பண்ணவர்சிறையைமீட்டு
நடைகெழுமயின்மேலேறிநலங்கொடன்னிருக்கையுற்றான். (௧௫)

வெள்ளியங்கிரியின்மேயவித்தகனேவப்போந்தே
யள்ளிலைவடிவேலணம்பியாற்றினன்பூசையென்று
மெள்ளியவறிவினாலிங்கொருகடவனத்தின்மேன்மை
வள்ளியமாறேசொல்லவல்லவர்மதிக்குங்காலே. (௪௬)

குமாரபூசைப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௪௭௧.

—:0:—

இராமலிங்கப்படலம்.

கொற்றமேவியகோசலைநாட்டினா
னற்றமேயுமயோத்திபுரப்பவன்
கற்றயாருங்கலையுந்தசரதற்
குற்றமைந்தனுவக்குமிராமனே. (௧)

தாதைசொற்கொடுசெம்பியும்பேரெழிற்
சீதையும்பின்றொடர்தரச்சென்றனன்
யேதையாளர்விரும்புவனம்புகுந்
தோதைமாதவரோடுறைந்தானரோ. (௨)

அன்னகாலையிலப்பனிறந்தன
னென்னவந்துபரதனியம்பினான்
சொன்னபோதுதுணுக்கமுற்றேங்கியே
யின்னன்மேவியிரங்கியழுதனன். (௩)

அய்யனேயெனுமாண்டகையேயெனு
மெய்யனேயெனும்வித்தகனேயெனுஞ்
செய்யகோலுடைச்சேவகனேயெனும்
வெய்யனேனைக்கைவிட்டனையேயெனும். (௪)

எந்தநாளுனைக்காண்பணியானெனும்
வெந்ததோவுன்விறற்றடந்தோளெனுஞ்
சந்தமார்பிலெனைத்தழுவிக்கொளா
வந்தவன்மையடைந்ததெங்கேயெனும். (௫)

சோரும்வீழ்ந்துதுடிக்கும்விழிகணீர்
வாருமாறுவருந்துமனத்துயர்
தீருமாறுசிறிதுமிலையெனும்
பாரும்விண்ணும்பரவுமிராமனே. (௬)

இருந்திவ்வாறுமெலியவிராமனைத்
திருந்துமாதவர்யாவருந்தேற்றினார்
பொருந்துமாறுபுகன்றுதெளிந்தபி
னருந்துநீர்க்கடனன்புறவாற்றினான். (எ)

அன்னநீர்க்கடனாலுவப்பெய்திலான்
மன்னர்மன்னனைவழுதிருநாமங்கு
முன்னமோர்ந்துமுனிவிராகவ
னென்னசெய்துபிழைத்தெனவேங்கியே. (அ)

துங்கமேன்மைச்சுநீக்கணபாதவன்
பங்கமோவுபொற்பாதப்பணிந்தெழா
வங்குற்றதவென்னைப்பன்மகிழ்ச்சியிது
றங்கநீர்க்கடனாற்றச்சமைந்தனன். (௯)

சிறந்தமாதலஞ்செப்புவையேலவ
ணிறந்தவாதனடைந்தாற்றுவருமெலா
மறந்தமாதவனுள்ளத்துணர்ந்தனன
மறந்தவாய்சிலைமைந்தனுக்கோதுவான். (௰)

வேறு.

நலங்கொடிருமயிலாடுதுறைக்குவாயுந்திசையி
லிலங்கரையோசனைதூரதெனனுமுளதொருநான
மலங்குடரிதகிவனெயென்றதையுரைப்பரத்தலத்து
